தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு – 2029 வெகுதானிய

கார்த்திகை ர்

துணர் : 72] டிசம்பர்-1998 [மலர் : 8

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : *பாவலர்.ச.பாலசுந்தரம்*

உள்ளுறை

1.	ஆசிரியர் பக்கம்	281
2.	ஒரு சொல் பல தீர்வுகள் டாக்டர்.சிலம்பு.நா.செல்வராசு	291
3.	பெண்ணின் முன்னேற்றத்திற்கு வேதநாயகம்பிள்ளை ஆடவர்க்குக் கூறும் அறிவுரைகள் முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை	297
4.	இனியர் – ஒரு – மருத்துவர் புலவர்.மா.சின்னு	301
5.	திருவாசகத்தில் உவமைகள் முனைவர்.ச.நடராசன்	307
6.	சொல் பற்றிய விளக்கங்களும் கருத்துக்களும் எஸ்.ஜெயசுதா	311
7.	சைவ எல்லப்ப நாவலரின் உரைத்திறன் வே.ராஜேஸ்வரி	317

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

நற்றமிழ் வாழ்க

புதிய தமிழிலக்கண நூலாக்கக் குழுக்கூட்டத்தின் போது அமைச்சரிடம் தெரிவித்த கருத்துக்கள்

1. 2000 ஆண்டுகட்குமுன் வடபுலத்தென்புல வேந்தர் மேற்கொண்டிருந்த பணி மீண்டும் இன்றைய தமிழக அரசு குறிப்பாகத் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கப்பெறுவது கண்டு உவக்கின்றேன். அன்றைய வேந்தன் தெய்வத்திற்குச் சமனாக இந்திரனாகக் கொள்ளப்பெற்றான். அதனான் அரசுவழி வந்த கலை இலக்கண நூல் இந்திரன் நூல் எனப்பட்டது. வைதிகர் ஐந்திரம் எனவும் சமணர் சினேந்திரம் என்றும் தமிழர் வேத்தியல் என்றும் கொண்டனர். அரசுக்கொள்கை ஐந்திரமதம் என்றும் பிற அறிஞர்தம் கொள்கை வியாழமதம் என்றும் வழங்கின. தமிழர் பொதுவியல் எனக் கொண்டனர். இற்றைக்கு எவ்வாறு வழங்குவது?

2. இனி இக்காலை நூல் உருவாக்க எண்ணும் அரசின் நோக்கம்? பிறமொழித் தாக்கங்களாலும், கலப்பாலும் கொச்சை வழக்காலும், வட்டாரத் திரிபுகளாலும் மேலும் உருக்குலையாவண்ணம் தமிழர் பண்பாட்டு நெறிக்கும், மொழி அறிவியல் நோக்கிற்கும் செந்தமிழ் மரபிற்கும், ஏற்ப. இதுகாறும் தோன்றியுள்ள நூல்கள் அவற்றின் உரைகள். அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் ஆயவற்றின் அடிப்படையில் அறிவியற்கலைச் சொற்களின் ஆக்கத்திற்கு வழிகாட்டும் முறையில் ஓர் இலக்கண நூலை உருவாக்குவதா?

அல்லது தொல்காப்பியத்தின் பழைய உரைகள் புதிய உரைகள் நன்னூல், நன்னூல் உரைகளில்வ நேர்ந்துள்ள சில பிழையான கோட்பாடுகளைக் களையாமல் அவற்றைத் தொகுத்து நூற்பாவும் உரையுமாகவோ அல்லது உரைநடையாகவோ ஒரு நூலைப் படைத்தளிப்பதா?

அல்லது இன்றைய வரை பள்ளி, கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்பெறும் இலக்கணப் பாட நூல்களை மேலும் எளிமைப்படுத்தி வழக்கு மொழியிலிருந்து எடுத்துக்காட்டுக்கள் தந்து மாணவர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் புரியும் வண்ணம் சிலவோ பலவோ புத்தகங்களை எழுதி வெளியிடுவதா?

அல்லது முற்போக்கு எழுத்தாளர்கள் என்று சொல்லவும் கருதவும் படும் நவீன தமிழ்ச்சிற்பியர் ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் உருவாக்கியுள்ள அரிய சொற்களுக்கும், நடைக்கும் விதிமுறைகளை வகுத்து நவீன தமிழ் இலக்கண நூல் ஒன்றை உருவாக்குவதா? இவையல்லாத பிற நோக்கும் இருக்கலாம். அரசு அதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டுகின்றேன்.

3. கருதப்படும் இந்நூலை உருவாக்க இக்குழுவினர் ஒவ்வொருவரிடமும் சில பல தலைப்புக்களைத் தந்து எழுதி வரச்செய்து பின்னர்க் குழுவினர் அனைவரும் ஒருங்கமைந்து ஆராய்ந்து முழுமையாக உருவாக்குவதா? நூல் உருவாகப் பிறபிற கலைத்துறை அறிஞர்களிடமிருந்து கருத்தேற்றங்கள் பெறப்படுமா? உருவாக்கப்படும் நூலைத் திறனாய்வு செய்து முடிபு கூறுதற்குத் தனியே வேறு அறிஞர்குழு அமைக்கப்பெறுமா? இத்திட்டத்திற்குக் காலவரம்பு யாது?

தமிழ் இலக்கண நூல்கள் பற்றிய சிறுகுறிப்பு

தொல்காப்பியம்

இற்றைக்குத் தொன்மையான நூல். முதல் நூலன்று. வழி நூலுமன்று ; முன்னையோர் நூல்களில் பரந்து கிடந்தனவற்றை அறிவியல் நோக்கொடு தொகுக்கப்பட்ட நூல். மொழியாக்கமும் மொழிக்காப்பும் பற்றிய நோக்குடையது ; இதுவரை உலகமொழியறிஞரால் சுட்டப்பெறாத நுண்மையான எழுத்திலக்கணத்தையுடையது ; வரிவடிவ நோக்கில் கூறாமல் பொருளடிப்படையில் இலக்கண விதிகளைக் கூறுவது ; தனிமொழி உறுப்புக்களையும் அவற்றின் சந்திகளையும் சுருக்கமாகக் கூறுவது ; சொற்றொடர் ஆக்கத்தை வெளிப்படை குறிப்பு என்னும் முறையில் வகுத்துக் கூறுவது ; பழந்தமிழ் இலக்கிய மரபுகளை ஒட்டிப் பொருளிலக்கணத்தை விளக்குவது. இதனை அடியொற்றித் தோன்றிய வழிநூல்கள் யாதும் கிட்டவில்லை. இற்றைக்குள்ளவையாவும் எதிர் நூலும் சார்பு நூல்களுமேயாம்.

வீரசோழியம்

20 விழுக்காடு சார்பும் 80 விழுக்காடு எதிர்வும் உடையதொரு நூல். எண்பதில் 30 விழுக்காடு பாணினீயத்தையும் 50 விழுக்காடு பாலி முதலிய பிற வடமொழிகளையும் பின்பற்றியது. தமிழில் பதவிலக்கணத்திற்குக் கால்கோளமைத்த முதல் நூல், எழுத்திலக்கணத்தையும் வேற்றுமை இலக்கணத்தையும் மடைமாற்றிய முதல் நூல், பௌத்த சமய நோக்கில் செய்யப்பட்ட நூல்.

நேமிநாதம்

வீரசோழியத்திற்கு எதிர்ப்பாகச் செய்யப்பட்ட மிகச்சுருக்கமான நூல். 50 விழுக்காடு தொல்காப்பியத்தையும் 20 விழுக்காடு வடமொழிகளையும் 30 விழுக்காடு தன்கோளையும் கொண்டிருப்பது, எழுத்துக்களை முதல் எழுத்து சார்பெழுத்து எனக் கூறுதற்கு வழிகாட்டியது. முதலெழுத்துக்கள்

31 என்றும் உயிர் மெய் வரிவடிவங்கள் உயிரை மட்டும் வைத்துப் பெருக்கி 216 எனவும் கூறும் முதல் நூல், கற்பனை மாந்தர்களாகிய தேவரையும் நரகரையும் மக்களொடு சேர்த்து உயர்திணையாகக் கூறும் முதல் நூல். வீரசோழியத்தை எதிர்த்துத் தோன்றியது எனினும் வீரசோழியத்தால் தமிழுக்கு நேர்ந்துள்ள குறைபாடுகளை உணர்த்தும் ஆற்றலில்லாமற் போனமையோடு அதனை ஒட்டி முதலெழுத்து 31 என்றும் குற்றியலிகரம் குற்றியலுகரம் உயிர் இகர உகரங்களின் குறுக்கமாகிய விகாரங்கள் என்றும் கொண்டது.

நன்னூல்

பவணந்தியார் கன்னட நாட்டு மன்னன் சீயகங்கனின் ஆணை அல்லது வேண்டுகோளை ஏற்று வீரசோழியத்தைப் போல ஐந்ததிகாரங்களடங்கிய தமிழிலக்கண நூல் ஒன்றைச் செய்துதர வந்து சனகாபுரத்துச் சன்மதி முனிவரிடம் பயின்று இரண்டதிகார அளவில் தம் நூலைச் செய்தவர். தொல்காப்பிய எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் இளம்பூரணர் உரை வாயிலாகக் கற்றவர். சமற்கிருதம் பாலி பிராகிருத மொழிகளை அறிந்தவர் ; தொல்காப்பியத்தையோ பாணினீயத்தையோ முழுதும் பின்பற்றவில்லை. வீரசோழியத்தையும் நேமிநாதத்தையும் சில கோட்பாடுகளில் பின்பற்றுகிறார்.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் சொல்லுறுப்பாக அமைந்து பொருள் வேறுபாடு செய்யும் தனி எழுத்துக்கள (ஒலியன்கள்) என்பதைக் கருதாத இளம்பூரணர் – புத்தமித்திரனார் குணவீர பண்டிதர்களைப் பின்பற்றி உயிர் இகர உகரங்களின் குறுக்கங்களாகக் கொண்டுள்ளார். "ஓங்குயிர் மெய் மற்றெழுத்தன்று உயிர்மாத்திரையே பெறும்" (வீர-5) என்னும் வீரசோழியத்தை ஏற்காமல் "ஓங்குயிர்கள் ஒற்றின் மேல் ஏறி உயிர்மெய்யாய் ஆங்கிரு நூற்றொருபத்தாறாகும்" என்னும் நேமிநாதத்தை ஏற்று உயிர்மெய் வரிவடிவங்களைச் சார்பெழுத்துக்களுள் முதலாவதாகக் கூறுகின்றார். முதலெழுத்துக்களின் விகாரங்களே சார்பெழுத்துக்கள் எனக் கொண்டவர் ஆய்தத்திற்குரிய முதலெழுத்து யாதெனச் சுட்டவில்லை. பின்னர் இவரே "நின்ற நெறியே உயிர்மெய் முதலீறே" என்றும் "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்றும் மாறு கொளக்கூறுகின்றார். சார்பெழுத்துக்கள் பத்தென்று வகுத்துக்

கூறிப்பின்னர் அவை மொழிக்கண் வரும் இடங்களையும் சொற்களையும் கணக்கிட்டு விரி 369 எழுத்துக்கள் என்றார். இளம்பூரணரைப் பின்பற்றித் தனிமொழி ஆய்தம் புணர்மொழி ஆய்தம் எனப்பகுத்துக் கூறுவார், கஃறீது, முஃடீது – ஆய்தம் குறுகும். அஃகடிய, இஃகடிய – ஆய்தம் குறுகாதென்பார். பவணந்தியாரின் பதவியல் கோட்பாட்டிற்கு அடிப்படை வீரசோழியம். வீரசோழியம் காட்டிய வழியாவது

மன்னிய சீர்வடநூலில் சரபச என்று வந்து
துன்னிய தாதுக்களின் போலத் தொகு தமிழ்க்கும்
மன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க முன்னிலையின்
உன்னியல் ஏவல் ஒருமைச் சொல் போன்று உலகிற்கு ஒக்கவே(வீர-60)

நடஅடு செய் பண்ணு நண்ணு போ சிந்தி நவில் உண் இரு
கிடவிடு கூறுபெறு மறு கொள் அழை வாழ் கிளை வெல்
கடநடு தங்கு கசி பொசி பூசு மிகு புகு செல்
இடுமுடி ஏந்து கொல் இவ்வண்ணம் மற்றும் இயற்றிக்கொள்ளே (வீர-61)

இக்கட்டளையை ஏற்று ஏவல்வினைகளே ஏனை வினைச்சொற்களின் பகுதியாக வரும் என்றார். மற்று வீரசோழியத்தைப் பின்பற்றிக் காலங்காட்டும் இடைநிலைகளை ஆராய்ந்து அமைத்துள்ளார். பதஇலக்கணத்தில் இவர் செய்த சீர்திருத்தம், அவர் போல தாது – பிரத்யயம் என இரு கூறாகப் பிரிக்காமல் பகுதிவிகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் என வகுத்துணர்த்தியமையாகும். பகுதி முதலிய ஆறனையும் பகுபத உறுப்புக்கள் என்கின்றனர் உரையாளர்கள். சந்தியும் விகாரமும் செய்கைகளேயன்றிக் கருவியாகுமா? பவணந்தியார் கருத்து யாது என்பதற்கு விளக்கமில்லை. மற்று வினைப்பகுதிகளை ஈற்றில் வரும் எழுத்துக்கள் அடிப்படையில் 24 என்கிறார். வகர ஈறு வினைச்சொல்லீறாக வருமா? வவ் என்று காட்டுகிறார். வௌ வென்பதன் போலியை வேறொரு சொல்லாகக் கூறலாமா. இவரே அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ ஒரன்ன என்கிறார்.

மற்றும்

இனி	–	இனித்தான்	முனி	–	முனிந்தான்
ஓ	–	ஓத்தான்	நொ	–	நொந்தான்

பார்	–	பார்த்தான்	நேர்	–	நேர்ந்தான்
ஊழ்	–	ஊழ்த்தான்	வாழ்	–	வாழ்ந்தான்

என ஒத்த ஈறுகளையுடையவை சந்தியில் வேறுபடுவதற்கும்

வை	–	வைதான்	நை	–	நைந்தான்	தை	–	தைத்தான்	எனவும்
பெய்	–	பெய்தான்	உய்	–	உய்ந்தான்	துய்	–	துய்த்தான்	எனவும்
தொழு	–	தொழுதான்	எழு	–	எழுந்தான்	பழு	–	பழுத்தான்	எனவும்

ஒத்த ஈறுகளை உடையவை சந்தியில் வேறுபடுவதற்கும்

செல்	–	சென்றான்	சொல்	–	சொன்னான்	
கல்	–	கற்றான்	புல்	–	புல்லினான்	எனவும்
கொள்	–	கொண்டான்	கேள்	–	கேட்டான்	
தள்	–	தள்ளினான்				எனவும்
நடு	–	நட்டான்	தடு	–	தடுத்தான்	எனவும்

ஒத்த ஈறுகளையுடைய இடைநிலை சந்திகளான் வேறுபடுதற்கும் பதவியலுள் யாதொரு விளக்கமுமில்லை. பதவியல் குன்றக் கூறலாக அமைந்துள்ளது.

இனி வடமொழியாக்கம் பற்றிக் கூறுமிடத்து இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு என்கிறார். ஈற்றில் உள்ள அநுஸ்வாரமும் விசர்க்கமும் உயிர் எழுத்துக்களா? வடமொழியில் 37 மெய் எழுத்துக்கள் என்கிறார். இவர் குறிப்பிடும் வடமொழி யாது என்பது தெரியவில்லை. வடமொழிகளை உயிர்மெய் வரிவடிவம் கொண்டு பயின்றவர். உயிர்மெய் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்து என்கிறார்.

“ஆவோடல்லது யகரம் முதலாது” என்னும் தொல்காப்பிய விதியை மறுத்து அஆஉஊஒஔயம் முதல் என்கிறார். யு யூ யோ யௌ என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட தமிழ்ச்சொற்கள் எங்கேனும் உண்டா?

நேமிநாதத்தைப் பின்பற்றி “மக்கள் தேவர் நரகர் உயர்திணை” என்கிறார். சமய நோக்கில் உருவகம் செய்யப்பட்ட தத்துவக் கற்பனைப் பொருள்களைத் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவி என்றும் அவற்றை வேண்டுமிடத்து உயர்திணைக்குரிய பாலாற் சுட்டுக என்றும் கூறும் தொல்காப்பிய அறிவியல் நோக்கினை இவர் சிறிதும் கருதவில்லை.

வேற்றுமை நிலை என்பது ஒரு பெயர்ப்பொருள் தன்னானும் பிறிதானும் நிகழும் வினை காரணமாக அமைவது. வேற்றுமை இலக்கணம்

தொடர் மொழியமைப்பிற் காணப்படுவது என்பதனை உணர்ந்த தொல்காப்பியர் தொடர் மொழி இலக்கணம் கூறத் தொடங்கி அவ்வழித் தொடரியல்பு பற்றிக் கிளவியாக்கத்துள் விளக்கி அடுத்து வேற்றுமைத் தொடரியல்பு பற்றி அறிவியல் நோக்கில் மூன்றியல்களாகப் பிரித்து வேற்றுமை இலக்கணங் கூறுகின்றார். அதனைக் சிறிதும் உணராத நன்னூலார். வேற்றுமை பெயருக்கே உரிய இலக்கணம் எனக்கருதிக்கொண்டு பெயரியலுள் வைத்து இலக்கணங் கூறுகின்றார். மற்று பொருளை வேறுபடுத்துவது வினை. வேறுபாட்டினை வரைந்துணர்த்தும் அடையாள இடைச்சொல் உருபு என்பதை அறியாமல் வடமொழியாளர் கூறும் விபத்திக்கும் காரகத்திற்கும் வேறுபாடு தெரியாமல் சுபந்தங்களே வேற்றுமை எனக்கருதிக்கொண்டு

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"

அவைதாம். பெயர் ஐ ஆன் கு இன் அதுகண் விளி என்கிறார். இங்ஙனம் கூறியதை முழுதும் மறந்துவிட்டு அத்ற்கு முரணாக,

செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே

எனத் தேற்றேகாரமிட்டுக் கூறுகின்றார். மேலும் உடைமையை இரண்டாம் வேற்றுமைக்கும் ஆறாம் வேற்றுமைக்கும் பொருளாகக் கூறுகின்றார். உரையாசிரியர்களைப் பின்பற்றிக் கருத்தாவை மூன்றாம் வேற்றுமைக்கும் உரியதாகக் கூறுகின்றார். காரணஞ்சுட்டாத உடனிகழ்ச்சி மூன்றாம் வேற்றுமையாகாது என்பதையோ, உடனிகழ்ச்சி என்பது தனி ஒரு வேற்றுமை நிலையன்று என்பதையோ இவர் கருதியதாகத் தெரியவில்லை.

இங்ஙனம் அடிப்படை இலக்கணக் கோட்பாடுகளில் தொல்காப்பியத்திற்கும் மொழியறிவியலுக்கும் மாறான நன்னூலே இற்றைக்குத் தமிழ் இலக்கண அடிப்படைப் பயிற்சிக்குரிய நூலாக ஆசிரியர்களால் கற்பிக்கப்பெற்று வருகிறது. இக்குழுவினர்க்குரிய அறிவிப்பிலும் தொல்காப்பியம் – நன்னூல் அடிப்படையில் புதிய இலக்கண நூலை உருவாக்க வீழைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்னூலைப் பற்றி மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் சிலருக்குக் கசப்பாகவும் சிலருக்கு வெறுப்பாகவும் சிலருக்கு வருத்தமாகவும்

இருக்கலாம். நன்னூலார் எனக்கு வேண்டாதவரோ, பகைவரோ அல்லர். அறிவியல் சான்ற தொன்மையான உயர்தனிச் செம்மொழி இன்றைய அளவில் ஆறுகோடித் தமிழர்க்கும் எனக்கும் தாய்மொழி. இனி என்றென்றும் வளர்ந்து வாழ வேண்டிய மொழி. அதற்கு எந்நிலையிலும் எவ்வளவிலும் மாசு நேரக்கூடாது. அது வடுப்படக்கூடாது என்னும் கடமையுணர்வு காரணமாக என் அறிவிற்குப் புலனாயவற்றை அறிஞர் பெருமக்களுக்குத் தெரிவித்துள்ளேன்.

நன்னூல் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளாகப் பயிலப்பட்டு வரும் நூல். மேலைநாட்டவர் பலர் நன்னூலின் உரைகள் வாயிலாகத் தமிழ் இலக்கணத்தை அறிந்து வந்துள்ளனர். நன்னூலைப் பின்பற்றி இலக்கணக் கொத்துரை – இலக்கண விளக்கம், தொன்னூல், முத்துவீரியம் – தமிழ்நூல் போன்ற இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே என அவர் கூறுவதனால் ஏற்கலாம். பதவியல் விளக்கம் தமிழிலக்கணத்திற்குப் புதிய வரவு எனக் கொள்ளலாம். குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் என்பதற்கு ஏற்ப குணத்தைப் பெருக்கி வளர்த்துக் கொள்ளலாம் என அறிஞர் பெருமக்கள் கருதலாம். அவர்கட்கு எனது வேண்டுகோள் நன்னூலை ஏற்றுக்கொண்டால்

1. தமிழ் நெடுங்கணக்கு – நால்வகைச் சொற்கள். வேற்றுமைக் கொள்கை. தொகை மொழி இலக்கணம் முதலியவை வடமொழியைப் பின்பற்றி அமைத்துக் கொள்ளப்பட்டவையே என்பதை மறுக்க வேண்டாம்.

2. ஒரு சில சொற்களைத் தவிர, காலம், உலகம், முகம், மதி, மீன், நீர், ஆதி, பகவன், அகரம், ஐகாரம், இலக்கணம், இலக்கியம், ஐந்து, எட்டு, நகரம், ஆகாயம் என்றாற் போன்ற சொற்கள் யாவும் ஆரியச் சொற்களே என ஒப்பலாம்.

3. ற ன ழ எ ஒ என்னும் ஐந்தெழுத்தைத் தவிர பிற எல்லாம் வடமொழியினின்று பெறப்பட்டனவே என்னும் சுவாமிநாததேசிகரைப் போற்ற வேண்டும்.

4. ஸ ஷ ஹ ஜ க்ஷ என்னும் எழுத்துக்கள் அவற்றின் உச்சரிப்போடு மீண்டும் ஏற்றுக் கொள்ளலாம்.

5. அறிவியல் மொழியாக்கத்தில் F Z Q என்னும் ஆங்கில எழுத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

6. ரட்சகர், ராஷ்டிரபதி, ரஷ்யா, ராக்கெட், ரெங்கூன், ரூர்கேலா, ரோமியோ, ரோமன், லண்டன், லாட்டரி லுங்கி லூத்தர், டிசம்பர், டாக்டர், டில்லி முதலிய சொற்கள் நாளேடுகளிலும் ப்ரபல எழுத்தாளர்களின் கதை கவிதை கட்டுரைகளிலும் பயின்று வருதலால் ர, ல, ட மூன்றையும் தமிழில் மொழிக்கு முதலாக வரும் என மேற்கொள்ளலாம்.

7. தனித்தமிழ் தூயதமிழ் என்பவற்றை மறந்துவிடலாம்.

8. ஒற்றுக்குறை – ஒருமை பன்மைமயக்கம். திணைமயக்கம் பால்மயக்கம் முதலியவற்றைப் பிழையென்று மாணவர்களுக்குக் கூறுவதை மாற்றிக் கொள்ளலாம். கருத்துப் புலப்பாடானால் போதும். தொடர் மொழியமைப்பு – நடை அது இது என்பதை மறந்துவிடலாம்.

இவற்றைச் சேர்க்கக்கூடாது. மறத்தல்கூடாது, விடக்கூடாது என்பதற்குக் காரணம் இவை வெளிப்படையாக மொழியை பண்பாட்டை மரபைச் சிதைக்கின்றன. தன்மானத்திற்கு ஊறு செய்கின்றன எனத் தெளிவாகத் தெரிகின்றன. கட்டுக்கோப்பில்லாமல் கவிதைகள் என்னும் பெயரால் வரும் மொழிச்சிதைவுகளும் இலக்கண உரையாசிரியர்கள் இலக்கண நூலார் செய்துள்ள மடைமாற்றங்களும் பிழைகளும் வாழ்க்கையை நேர்முகமாகத் தாக்கவில்லை. சில புரிவதில்லை என்பதைத் தவிர வேறொன்றும் எனக்குப் புரியவில்லை.

எனது பணி

யான் பல்லாண்டுகள் ஆசிரியராக அமர்ந்து மாணாக்கரோடும் பேராசிரியன்மாரோடும் ஆய்வாளர்களோடும் பழகிப்பெற்ற அனுபவத்தில் பெரும்பாலோர் இலக்கணக் கல்வியையும் இலக்கணச் சிந்தனையையும் புறக்கணிப்பவராக இருத்தலை அறிந்தேன். ஒரு மொழிக்குக் காப்பாகவும் அரணாகவும் இருப்பது இலக்கணம். ஆழ்ந்த மொழிப்பற்றுடையோருங்கூட அதனைப்புறக்கணிப்பதேன் ! இலக்கண நூல் உரைகளின் கடுமையும் திசை திருப்பும் நோக்கும் அதற்குக் காரணமாகலாம் என்றுணர்ந்தேன். அதனான் இலக்கணக்

கோட்பாடுகளை அறிவியலுக்கு ஏற்பப்பட்டாங்கு எடுத்துரைப்பின் பயன்தரும் என எண்ணினேன். அவ்வெண்ணம் வலுப்பெற்றமையான் கவியரங்கம் மேடைப்பேச்சு, இலக்கியச் சொற்பொழிவு இலக்கியப் படைப்பு முதலியவற்றை ஒதுக்கி முழுமையாக இலக்கண ஆய்வில் ஈடுபட்டேன். தொல்காப்பிய உரைகள் இடைக்காலப் பிற்கால நூல்கள் யாவற்றையும் திறனாய்வுச் சிந்தனையோடு பயின்றேன். பற்பல உண்மைகள் பளிச்சிட்டன. தொல்காப்பியத்திற்கு உரை எழுத முற்பட்டேன்.

அக்காலை தஞ்சையில் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. முதல் துணைவேந்தரிடம் என் விருப்பத்தை விளக்கினேன். பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப் பணிக்குரியது. உரை எழுதி வெளியிடுவது பொருத்தமாக இராது என்றார். வேறு முக்கியப் பணி தருவதாகச் சொன்னார். என் மனச்சான்று இடந்தாராமையின் அகலவுரை எழுதுவதைக் குறைத்து ஆராய்ச்சிக்காண்டியுரை என்னுமளவில் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதிமுடித்தேன்.

அதனைப் பல்கலைக்கழக வாயிலாக வெளியிட விரும்பி இரண்டாவது துணைவேந்தரிடம் தெரிவித்தேன். அவர் சில கருத்துக்களைக்கூறி நீங்களே வெளியிடுவது நல்லது என்றார். பொருள் முதலிய இடர்ப்பாடுகளுக்கிடையே அதனை ஐந்துபகுதியாக வெளியிட்டேன்.

தமிழுக்குப் புதிய இலக்கண நூல் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற கருத்துப் பரவிவருதலைக் கேட்டு மூன்றாவது துணைவேந்தரிடம் 'யான் அப்பொறுப்பை ஏற்கிறேன் எனக்குத் துணைபுரியுங்கள்' என்றேன். 'அதனைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் அகராதித் துறைக்கு உங்கள் பணி தேவைப்படுகிறது' என்றார். எனக்கு விருப்பமில்லை. பின்னர் நானே புதிய நோக்கில் எழுத்து சொல் இலக்கியம் மூன்றற்கும் கி.மு. முதல் கி.பி. 1991 வரை அமைந்துள்ள மொழி இலக்கியங்களுக்குரிய புதிய இலக்கணத்தைத் தென்னூல் என்னும் தலைப்பில் இரண்டு பகுதியாக எழுதி வெளியிட்டேன்.

பின்னர் நாலாவது துணைவேந்தரிடம் 'எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களை உரைநடையில் விரிவாக விளக்கி ஒரு நூலை

எழுத எண்ணுகிறேன். பல்கலைக்கழகத்தில் இருந்து செய்யின் மிக்கப்பயன்தரும்' எனக் கூறினேன். வாய்ப்பு நேரவில்லை. பின்னர் யானே அதனை எழுதி முடித்தேன். அது கையெழுத்துச் சுவடியாகவே உள்ளது. இறையருள்புரியின் விரைவில் வெளிவரும்.

பின்னர் 'மூன்றதிகாரங்களுக்கும் இலக்கணக் கலைச்சொற்பொருள் விளக்க அகராதி ஒன்றைத் தொகுத்து வெளியிடின் அது யாவர்க்கும் பயன்தரும். இருவரை எனக்கு உதவுங்கள். மூன்றாண்டுகளுக்குள் இயற்றி முடிக்கலாம்' என ஐந்தாவது துணைவேந்தரிடம் வேண்டினேன். காலந்தாழ்த்தமையான் யானே அச்சுமையை ஏற்று எழுத்து, சொல், யாப்பு, அகப்பொருள், புறப்பொருள் ஐந்தற்கும் கலைச்சொல் பொருள் விளக்க அகராதிகளை ஓரளவு சுருக்கமாக எழுதிமுடித்தேன். அச்சாகி வருகின்றன.

இவற்றுடன் சொல் உருவாக்கங்களை விளக்கி மொழியாக்க நெறி மரபிலக்கணம் என்னும் புதிய இலக்கண நூலையும் தமிழ் நெறி மரபிற்கும் அறிவியலுக்கும் முரணாகத் திகழும் இடைக்கால நூல்களின் உட்கருத்துக்களைச் சுட்டி மடைமாறிய தமிழ் இலக்கணநூல்கள் என்னும் ஆய்வுநூலையும் இவற்றிற்குத் துணையாக இருவகை வழக்கிலும் பயின்று வரும் சொற்களை எடுத்து அவற்றுள் அயல்மொழிச் சொற்களை சுட்டியும் தமிழ்ச்சொற்களை அடிப்படை உரிச்சொல்லோடு பொருள் விளக்கம் வரைந்தும் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளேன். அடுத்து இதுவரை யான் எழுதியுள்ள இலக்கண ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட உள்ளேன். மற்றவை திருவருள் செயல். இவற்றை அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து மேலும் சேர்க்க வேண்டிய விளக்கங்களுடன் அரசு வெளியிட விரும்பினால் அரசுடைமையாக்கிக் கொள்ளலாம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

அன்பன்

ச.பாலசுந்தரம்.

❄❄❄❄❄❄

ஒரு சொல் பல தீர்வுகள்

டாக்டர்.சிலம்பு.நா.செல்வராசு விரிவுரையாளர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி – 605 001.

ஒரு சொல் பல தீர்வுகள் – என்ற தலைப்பு கவித்துவம் நிறைந்த தொடர். என்றாலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு முதன்மை பெற்றதாக இத்தொடர் அமைந்துள்ளது. உலக வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் தமிழர் வரலாற்றிலும் ஒரு சில சொற்களும் அவற்றிற்குத் தரப்பட்ட விளக்கங்களும் அவ்வரலாற்றையே மாற்றியமைக்கும் வல்லாண்மை பெற்றவையாகத் திகழ்ந்துள்ளன.

ரிக் வேதத்தில் காணப்பட்ட அக்ரி என்ற புகழ் பெற்ற சொல்லுக்குத் தரப்பட்ட விளக்கங்களும் தீர்வுகளும் உடன் கட்டை ஏறுதல் என்ற சமூகப்பண்பாட்டு வழக்கத்தை வரலாற்று வழியாக வாசிப்பதில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

தொல்காப்பிய நூற்பா ஒன்றில் இடம் பெற்றுள்ள ஓரை என்ற சொல் தமிழ் அறிஞர்கள் இடையே பெரும் சொற்போரை நிகழ்த்தி உள்ளது. பி.டி.சீனிவாச ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரியார், வையாபுரிப்பிள்ளை ஆகியோர் ஓரை என்பது கிரேக்க மொழியில் வழங்கிய ஹொரா என்ற மூலத்திலிருந்து ஓரா என வட மொழியில் புகுந்து பின்பு தமிழில் ஓரை என வழங்கலாயிற்று என்று முடிவு உரைத்தனர். இதனால் தொல்காப்பியத்தின் காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு ஆகும் என்ற வரலாற்று முடிவிற்குப் பலர் வந்தனர்.

ஆனால் மறை மலையடிகள், பாரதிதாசன், பாவாணர், கே.கே.பிள்ளை, சி.இலக்குவனார், கோவிந்தன் முதலாய அறிஞர் பெருமக்கள் ஓரை தமிழ்ச் சொல்லே என்ற கருத்தை முன் வைத்துப் பெரும் ஆய்வுகளை நிகழ்த்தினர். இதனால் தொல்காப்பியத்தின் காலத்தைக் கி.மு.க்கும் முன்னர் கொண்டுச் செல்ல வழிகள் வகுக்கப்பெற்றன.

தமிழக வரலாற்றில் ஒரு சொல்லுக்குப் பலதீர்வுகள் என்ற வகையில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகளுக்கு இரு சூழல்களை அடிப்படைகளாகக் கூற வேண்டும்.

ஒன்று சமயச் சூழல் அடிப்படை
இரண்டு மொழிச்சூழல் அடிப்படை

சமயப் போட்டிகள் நிலவிய சமூகச் சூழ்நிலையில் சமயம் சார்ந்த சில சொல்லாட்சிகளுக்குப் பல்வேறு பொருள் விளக்கங்களை அறிஞர்கள் தந்துள்ளனர். அச் சொல்லாட்சிகளுள் ஒன்று எண்ணாயிரம் என்பது ஆகும். திருஞான சம்பந்தர் வரலாற்றைச் சுவைபடப் பாடிச் செல்லும் சேக்கிழார், ஞானசம்பந்தர் மதுரையம்பதியில் நிகழ்த்திய அருளிச் செயல்களை விரிவுபட விளக்கியிருக்கிறார். மதுரையில் சமணர்களுக்கும் ஞானசம்பந்தர்க்கும் ஏற்பட்ட வாதங்களும் அவ்வாதங்களில் சமணர்கள் தோற்றதுமான செய்திகளை அப்புராணத்தில் விரிவாகச் சேக்கிழார் விளக்கியிருக்கிறார். வாதங்களில் தோற்ற எண்ணாயிரம் சமணர்களும் இறுதியில் கழுவேறினர் என்ற கருத்து அறிஞர்களிடையே விரிவான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. எண்ணாயிரம் சமணர்கள் கழுவேறியதற்கான நிகழ்ச்சிக்கு எந்தவித ஆதாரமும் இல்லை எனவும் கல்வெட்டுகளிலோ தேவாரப்பதிகங்களிலோ இந்நிகழ்ச்சி பற்றி எந்த விதக் குறிப்பும் இடம் பெறவில்லை எனவும் நம்பியாண்டார் நம்பி தவிர வேறு யாரும் இந்நிகழ்ச்சியைக் குறிக்கவில்லை எனவும் அறிஞர்கள் கூறியுள்ளனர். எண்ணாயிரம் சமணர்கள் என்ற எண்ணிக்கை, அந்நிகழ்ச்சி நடைபெற்ற பல்லவர் காலத்தில் மிகப் பெரிய மக்கள் தொகையைக் குறிக்கக் கூடியது ஆகும். இப்பெருந்தொகையிலான சமணர்கள் கழுவேற வாய்ப்பில்லை என்ற வாதம் ஒருபுறம் இருக்க, எண்ணாயிரம் என்றசொல் எண்ணிக்கையைக் குறிக்கவில்லை. எண்ணாயிரம் என்ற ஊரைக் குறிப்பது என்ற போக்கில் சில கருத்துக்கள் உரைக்கப்பட்டன. எண்ணாயிரம் என்ற ஊரைச் சேர்ந்த சமணர்கள் கழுவேறிய நிகழ்ச்சியே எண்ணாயிரம் சமணர்கள் கழுவேறியதாகப் பிற்காலத்தில் குறிக்கப்பட்டது என்ற கருத்துப் போக்கில் ஆய்வுகள் நிகழ்ந்தது உண்டு.

மொழிச்சூழல் அடிப்படையில் பெரும் விவதத்தைத் தோற்றுவித்த சொல் ஐந்திரம் ஆகும். தமிழரின் முதல் நூலாகவும் தொன்மைச் சிறப்புமிக்க நூலாகவும் கருதப்பெறும் தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் ஐந்திரம் என்ற நூலை நன்றாகக் கற்று உணர்ந்தவர் என்ற பொருளில் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனப் பாயிரக்காரர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழிலக்கியத்திற்கு இலக்கணம் கூற வந்த தொல்காப்பியர்க்கு, வடமொழி நூலாகிய ஐந்திரத்தை கற்று உணர்ந்தவர் என்ற அடைமொழி அவசியமா? என்ற வினாவை எழுப்பி ஒரு சில அறிஞர்கள், இவ்வாறு கூறியதால் தொல்காப்பியத்தின் முதன்நூல் ஐந்திரமே என்று முடிவு உரைத்தனர். வடமொழி இலக்கண வரலாற்றில் பாணினிக்கு முன்பே வழக்கில் இருந்த ஒரு நூல் ஐந்திரமாகும். இது கி.பி.முதல் சில நூற்றாண்டுகளிலேயே வழக்கற்றுப் போய்விட்டது என்பது அறிஞர்களின் கருத்து.

தமிழில் அகத்திய இலக்கணமரபு ஒருபுறம் இருக்க அவரது மாணவராகிய தொல்காப்பியர் அகத்தியத்தைப் படித்தவர் என்று கூறாது ஐந்திரத்தை முழுவதும் முறையாகப் படித்தவர் என்று கூறியதாலேயே தொல்காப்பியத்தின் முன் மாதிரியாகவோ முதன் நூலாகவோ ஐந்திரம் விளங்கி இருக்கவேண்டும் என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும்.

இக்கருத்தை 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் மறுத்திருக்கிறார். ஐந்திரத்தைப் பார்த்துதான் தொல்காப்பியம் படைக்கப்பட்டது என்றால் தமிழ்மொழியில் உள்ள புணர்ச்சிமுறைகளும் வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல் இலக்கணங்களும் அஃறிணை, உயர்திணை முதலிய திணைப் பாகுபாடுகளும் அகம் புறம் முதலிய பொருள் பாகுபாடுகளும் செய்யுள் இலக்கணங்களும் வடமொழி இலக்கண நூல்களில் காணப்படாமையால் இக்கருத்து பொருந்தாது என்று மாதவச் சிவஞான முனிவர் கூறியுள்ளார்.

ஐந்திரம் இலக்கண நூல் இல்லை என்று ஆராய்ந்து கூறும் அறிஞர்கள் சிலரும் உள்ளனர். தமிழிலக்கிய வரலாற்றில் முதன்முதலில் சிலப்பதிகாரத்தில்தான் ஐந்திரம் பற்றிய குறிப்பு வருகிறது.

விண்ணவர் கோமான் விழுநூல்

என்றும்

கப்பத்து இந்திரன் காட்டிய நூல்

என்றும் ஐந்திர நூல் சுட்டப்பெற்றுள்ளது. ஐந்திரம் இந்திரனால் இயற்றப்பட்டதையும் அச்செய்யுள் அடிகள் தெரிவித்துள்ளன. இங்குக் கூறப்படும் ஐந்திரம் ஒரு தத்துவ நூலாக இருக்குமே அன்றி இலக்கண நூலாக இருக்க வாய்ப்பில்லை என்று ஒரு சாரார் கூறியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையோனுக்கும் கவுந்தி அடிகளுக்கும் இடையே நிகழும் உரையாடலில்தான் ஐந்திரம் பற்றிய குறிப்பு வருகிறது. இந்திரன் தோற்றுவித்த வியாகரணச் செய்திகள் அருககுமாரன் அருளிய பரமாகமங்களில் காணப்படுகின்றன என்பதே அந்த உரையாடல் செய்தி. மாங்காட்டு மறையோனுக்கும் கவுந்தி அடிகளுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் சூழல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்திரன் செய்த நூலில் உள்ள செய்திகள் அருககுமாரன் செய்த ஆகமங்களில் உள்ளன என்றால் இந்நூல் சமயத்தத்துவ நூலாகத்தான் இருக்க வேண்டும். சமயத்தத்துவங்கள் கூறும் நூலில் மொழிபற்றிய இலக்கணச் சிந்தனைகள் இடம் பெற வாய்ப்பில்லை எனவே சிலப்பதிகாரம் சுட்டும் ஐந்திரம் ஒரு சமயத்தத்துவ நூல் எனவும் இதனையே தொல்காப்பியர் அறிந்திருந்தார் எனவும் ஒரு சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1875-ஆம் ஆண்டு ஏ.சி.பர்னல் எனும் அறிஞர் ஐந்திரத்திற்கும் அதனுடைய வழி நூலாகிய காதந்திரத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை விரிவாக ஆராய்ந்து நூல் ஒன்றை வெளியிட்டார். இந்த ஆய்வுப்போக்கினால்

தொல்காப்பியத்தின் முதன்நூல் ஐந்திரம் ஆகும் என்றும் இந்தக் கருத்தை முதன்மைப்படுத்தியே

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

என்ற பாயிரத்தொடர் அமைந்துள்ளது என்றும் தமிழகத்தில் பெருவீச்சில் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டன. இதன் மறுவிளைவாக ஐந்திரத்தை மறுத்துரைக்கும் போக்கிலும் ஐந்திரம் என்ற இலக்கண நூலையே இத்தொடர் குறிக்கவில்லை என்றும் ஆராய்ச்சிகள் எழுந்தன.

ஐந்திரம் என்ற சொல்லில் உள்ள இடையினரகரம் பிழையாக வழங்கலாயிற்று என்றும் வல்லின றகரம் இட்டு எழுவதே மரபு என்றும் இதற்கு எழுத்து சொல் பொருள் யாப்பு அணி எனும் ஐந்து திறங்களை உரைப்பது எனப்பொருள்படும் என்றும் இவற்றை அறிந்தவர் என்ற பொருளில்தான் பாயிரத்தொடர் அமைந்துள்ளதே தவிர வடமொழி நூலை அறிந்தவர் என்ற பொருளில் அமையவில்லை என்றும் அப்பாதுரையார் கூறியுள்ளார்.

ஐந்திரம் என்பது பஞ்சாஸ்திகாயம் என்பதைக் குறிப்பது என்று ஆனந்தநாத நயினார் விளக்கி இருக்கிறார். ஐந்து அஸ்திகாயங்களை அறிந்தவர் தொல்காப்பியர் என்ற பொருளையே ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் எனும் பாயிரத்தொடர் குறித்துள்ளது என்பது இவரின் கருத்தாகும்.

ஐந்திரம் என்பது சைனசமயம் வற்புறுத்தும் ஐவகை ஒழுக்கங்களைக் குறிக்கும் என்று பேராசிரியர் அறவாணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஊறன்மை, வாய்மை, களவுசெய்யாமை, மணவாமை, தவம் என்பனவே அந்த ஒழுக்கங்கள் என்று கூறும் பேராசிரியர் இவையே அன்றிச் சமயத்துறவிகளுக்கு விதிக்கப்பெற்ற உறுதிப்பாடுகளையும் இது குறிக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அன்புடைமை, பழிநாணுடைமை, ஒப்புரவுடைமை, கண்ணோட்டம், மெய்யுரை என்பவனவே அந்த உறுதிப்பாடுகள் ஆகும்.

ஐந்திரம் என்பதற்குச் சிவலிங்கனார் வேறொரு பொருளைக் கூறுவார். உலகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து பிரிவுகளை உடையது என்றும் இவற்றைப் பற்றிய இயற்கையையும், காலங்களையும் ஒழுக்கங்களையும் சிறப்புகளையும் அறிந்த காரணத்தால் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் என்று அழைக்கப்பட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆக ஐந்திரம் என்ற சொல் தமிழிலக்கிய இலக்கண வரலாற்றில் ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான ஆராய்ச்சிக்கு உரியதாகிப் பல்வேறு தீர்வுகள் ஆராய்ச்சி முடிவுகளையும் வெளியிடக் காரணமாகி உள்ளதை அறியமுடிகின்றது. தமிழ் வடமொழி என்ற மொழிச்சூழல் காலந்தோறும் ஐந்திரம் என்ற சொல்லுக்குரிய பொருளை முடிவு செய்வதில் அடிப்படை ஆகியதையும் அறிய முடிகிறது. தமிழ்நாட்டு மொழிச்சூழலில் வடமொழியை ஏற்றுக் கொண்ட காலங்களில் எல்லாம் ஐந்திரம் என்ற வியாகரணநூலை நிரம்பக் கற்றவர் தொல்காப்பியர் எனும் கருத்து மிக்க தீர்வுகளை வெளியாகி உள்ளன. வடமொழியை ஏற்காத மொழிச் சூழல் நிலவிய காலங்களில் எல்லாம் ஐந்திரம் இலக்கண நூல் இல்லை எனும் கருதப்படத் தீர்வுகள் வெளியாகி உள்ளன.

இவ்வாறாக ஒரு வரலாற்றை உருவாக்குவதிலும் தீர்மானிப்பதிலும் வரையறுப்பதிலும் சில சொற்கள் பல்வேறு தீர்வுகளைக் காலந்தோறும் தந்துள்ளதை அறிய முடிகிறது.

****

பெண்ணின் முன்னேற்றத்திற்கு வேதநாயகம்பிள்ளை ஆடவர்க்குக் கூறும் அறிவுரைகள்

முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை,
இணைப்பேராசிரியர்,
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 005.

சமதுாயத்தில் வாழ்கின்ற மக்களிடையே வேறுபாடுகளை – சமுதாயத் தரப்பிரிவுகளை – உருவாக்கும் காரணிகளில் பால் வேறுபாடும் ஒன்று ஆகும். சமுதாயம் மேம்பாடடைய, சமுதாயச் சமத்துவ நிலை உருவாக ஆடவர்களுக்கு இணையான நிலையில் பெண்களின் வாழ்க்கை நிலையும் அமைதல் வேண்டும். ஒரு சமுதாயத்தின் தரம் உயர்வடைவதும் தாழ்வடைவதும் அச்சமுதாயத்தில் வாழும் பெண்களின் நிலையைப் பொறுத்தே ஆகும். சமுதாயம் என்பது உறவு முறைகளாகிய வலையால் பின்னப்பட்ட அமைப்பு ஆகும். இவ்வுறவு முறைகளில் பால் அடிப்படையில் அமையும் ஆண் – பெண் உறவுமுறைகள் மிக நெருங்கியனவாகவும் நிலையானவையாகவும் காணப்பெறுகினறன.[1] ஒரு சமுதாயத்தைப் பற்றிக் கூறும்போது அச்சமுதாயத்தின் அச்சுப்போன்று திகழும் பெண்களின் நிலை பற்றியும் கூறுதல் அவசியம் என்றும், ஒரு சமுதாயம் பெண்களுக்கு எந்த அளவுக்கு உரிமைகள் கொடுத்துள்ளது என்பதைப் பொறுத்தே அச்சமுதாயத்தின் தன்மையையும் மேன்மையையும் அளவிடலாம் என்றும் கருதுவர்.2 சமுதாயத்தில் பெண்கள் இழிவாகக் கருதப்பெறல், கற்றவர்களாலும் இகழப்பெறல், அடிமைகள்போல் நடத்தப்பெறல், வசைபாடப்பெறல், கொடுமைப்படுத்தப்பெறல், அடிக்கப்பெறல், திட்டப்பெறல், அன்பின்றி நடத்தப்பெறல், குடும்பத்தினரின் கொடுமைகளுக்குள்ளாதல், கட்டுப்பாடுகளுக்குள்ளாதல், கட்டாய மணத்திற்குள்ளாதல், குழந்தை மணத்திற்குள்ளாதல் முதலான துன்பங்களுக்கு ஆளாவதைக் கண்டு அவற்றைத் தம் படைப்புக்களின் வழி வேதநாயகம் பிள்ளை உணர்த்துகின்றார். எனவே, சாதி வேறுபாடுகளற்ற சமுதாயம் படைப்பதற்குரிய சமத்துவச் சிந்தனைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதற்குரிய சிந்தனைகள், சமயக் காழ்ப்புணர்வை அகற்றுதற்குரிய சிந்தனைகள் முதலியனவற்றைத் தம் படைப்புக்களில் வெளிப்படுத்தும் மாயூரம் வேதநாயகம்பிள்ளை பால் அடிப்படையில்

அமையும் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற பெண்ணின் முன்னேற்றச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். பெண்ணின் மேம்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் வேதநாயகம்பிள்ளை ஆடவர்கள் மனம் வைத்தாலன்றிப் பெண்களின் வாழ்க்கை மேம்பாடடைய முடியாது என்ற எண்ணத்தில் ஆடவர்களுக்குப் பல அறிவுரைகளைக் கூறுகின்றார். அவை பற்றிச் சிறிது காணலாம்.

பெண்ணின் இசைவு பெற்று மணம்புரிதல்

சமுதாயத்தில் காணப்படும் நிறுவனங்களில் இன்றியமையாத ஒன்று குடும்பம் ஆகும். சமுதாய உறுப்பினர்களின் பல்வேறு தேவைகள் குடும்பத்திலேயே நிறைவு பெறுகின்றன. குடும்பம் என்ற நிறுவனத்தின் இன்றியமையா உறுப்பினர்கள் கணவனும் மனைவியும் ஆவர். ஆனால் பெண்களின் சமுதாயத் தாழ்நிலை, ஆணாதிக்கநிலை, பெண்கள் பெற்றோர்களைச் சார்ந்திருக்கும் நிலை முதலிய காரணங்களால் திருமணத்தின்போது பெண்களின் உணர்வுகளையும் விருப்பத்தையும் பற்றிச் சமுதாயம் கவலை கொள்வதில்லை. இதனால் பெண்களின் நிலை மேலும் தாழ்வடைய வாய்ப்பு உள்ளது என்பதை உணர்ந்த வேதநாயகம்பிள்ளை பெண்களின் இசைவைப் பெற்றே மணம்புரியவேண்டும் என ஆடவர்களுக்கு அறிவுரை கூறுகின்றார் எனலாம்.

> "அற்பமாகிய ஸ்தாவர ஜங்கமங்களைப் பற்றி இருவர்
> செய்துகொள்கிற உடன்படிக்கைக்கு, ஒருவர் சம்மதித்து
> ஒருவர் சம்மதிக்காவிட்டால், அந்த உடன்படிக்கை
> ஊர்ஜிதமாகுமா? அப்படியிருக்க, ஸ்திரி புருஷர் –
> களுடைய யாவத் ஜீவ பரியந்தமும் அதற்குப் பிறகு
> தலைமுறை தலைமுறையாகவும் நீடித்திருக்கவேண்டியதும்
> இகபரசம்பந்தமானதும், தாய், தந்தையர், மற்ற
> பந்துக்கள், இஷ்டமித்திரர்கள், கோயிலார்,
> குருக்கள் முதலானவர்களுடைய அனுமதியின் மேல் நடக்க
> வேண்டியதுமான விவாக உடன்படிக்கைக்குப் புருஷன்
> மட்டும் சம்மதித்து ஸ்திரீயும் அவள் இனத்தவரும்
> சம்மதியாவிட்டால் அந்த உடன்படிக்கை செல்லுமா?"[3]

என வினவி ஆடவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றார்.

குணத்திற்கு முதலிடம் கொடுத்தல்

சமுதாயத்தில் ஆடவர்கள் தமக்கு மனைவியாக வரப்போகும் பெண் அழகிலும் பொருளாதார நிலையிலும் மேம்பட்டுக் காணப்படவேண்டும் என்று எதிர்பாக்கின்றநிலை நிலவுவதைக் கண்ட வேதநாயகம்பிள்ளை நல்ல குணமுடைய பெண்ணையே மணம்புரியவேண்டும் என அறிவுரை கூறுகின்றார்.

> "நல்லவள் ஏழையானாலும் தள்ளாதே"[4]
> "பழகு நற்குணமில்லா அழகியின் வீடு
> பாம்பு புலி கரடி வாழ்ந்திருக்கும் காடு"[5]

> "அழகில்லையானாலுங் குணத்தையே தேடு"[6]

"கூட்டு நற்குணமில்லாக் கொடியவள் பாம்பு
குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பு"[7]

எனப் பெண்களின் குணத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுகின்றார்.

அன்புடன் பாதுகாத்தல்

தாம் பிறந்த வீட்டைவிட்டு, பெற்றோர்களை விட்டு மாலையிட்டவனை நம்பி வந்த பெண்களை அன்புடன் நடத்தி, ஆதரவு கொடுத்துப் பாதுகாத்தல் ஆடவர் கடன் என்று அறிவுறுத்துகின்றார்.

"நம்முடைய பத்தினிகள் பிறந்த ஊரையும் வீட்டையும்
தாய் தந்தை சகோதரர் முதலான பந்துக்களையும்
விட்டு நம்பிவருகிறபடியால் அவர்களை மிகவும்
பிரீதியாய் நடத்தவேண்டியது நம்முடைய கடமை –
யல்லாவா?"[8]

என வினவிப் பெண்களிடம் அன்பு பாராட்ட வேண்டுகிறார்.

"புருஷனுள்ள வரையில் ஸ்திரீயை அன்பாக ஆதரிக்க
வேண்டியதும் தனக்குப் பிற்காலம் அவளும் அவளுடைய
பிள்ளைகளும் தெருவில் அலையாதபடி சீவனுக்குத்
தகுந்த மார்க்கம் செய்யவேண்டியதும் புருஷனடைய
பிரதான கடமையாயிருக்கிறது"[9]

"பெண்களை எந்நாளும் உடன்பிறந்தவராகிய ஆடவர்
செறிந்த அன்புடன் பாதுகாத்தல் அறமுறைமை"[10]

"ஸ்திரீகள் சுகுமார தேகமும் மிருதுவாக்கியமும்
துர்ப்பலமும் நாணமும் அச்சமும் உடையவர்களாதலால்
கண்முதலிய மிருதுவான அவயவங்களை அதிக
ஜாக்கிரதையுடன் பாதுகாப்பதுபோல், அவர்களிடத்திலும்
அதிக கிருபை பாராட்டவேண்டியது புருஷர்கள்
மேல் விழுந்த பாரமாயிருக்கிறது"[11]

"கல்யாண சம்பிரமத்துக்கு முக்கிய காரணமான ஸ்திரியைப்
பிற்பாடு அப்பிரியமாகவும் அசிரத்தையாகவும் நடத்துவது
தர்மமா?"[12]

"வன்மை குறைந்து, மென்மை மிகுந்துள்ள அடக்கம் வாய்ந்த
பெண்களிடம் கொடுந்தன்மை இன்றி அன்பிரக்கம் கொள்ள–
வேண்டும்"[13]

"தாய், சகோதரி, பத்தினி முதலானவர்கள் தம்முடைய சுகத்தையும் பிரியத்தையும் தேடுவதில் அவர்களுடைய நினைவுகளை–யெல்லாம் வைக்கிறார்கள். நாம் அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுவது மிகவுமரிது"[14]

"அன்னமிட்ட வீட்டில் கன்னமிடுவது போலத் தங்களுக்குச் சகல சுகங்களையும் கொண்டுவந்த ஸ்திரிகளைப் புருஷர்கள் அலட்சியம் செய்வது எவ்வளவு அநியாயம்"[15]

என்கிறார். பெண்கள் மென்மைக்குணம் படைத்தவர்கள். நாணமும் அச்சமும் உடையவர்கள். அடக்கம் நிறைந்தவர்கள். பிறர் நலம் ஒன்றையே நாடுபவர்கள். எனவே அவர்களிடம் அன்பு செலுத்தி அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

இவ்வாறு சமுதாயத்தில் பால் அடிப்படையில் தாழ்நிலையுற்றுக் காணப்பெறும் பெண்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்படுதற்கு ஆடவர்கள் செய்ய வேண்டியன பற்றி ஆடவர்களுக்கு வேதநாயகம்பிள்ளை அறிவுரைகள் கூறுவதன் மூலமும் பால் வேறுபாடற்ற சமத்துவச் சமுதாயம் படைக்க முனைகின்றார் எனலாம்.

மேற்கோள் சான்றுகள் :

1. R.N.Sharma, Indian Society, .83
2. எஸ்.வையாபுரிப்பிள்ளை, "புறநானூறும் தமிழரும்". புறநானூற்றுச் சிந்தனைகள், ப.53.
3. வேதநாயகம்பிள்ளை, சுகுணசுந்தரி, ப.66
4. வேதநாயகம்பிள்ளை, சர்வசமய சமரசக்கீர்த்தனைகள், 180 : 9 : 1
5. வேதநாயகம்பிள்ளை, பெண்மதிமாலை, பெண்பார்க்கத்தூது அனுப்புதல் : 3
6. வேதநாயகம்பிள்ளை, அதே நூல், பெண்பார்க்கத்தூது அனுப்புதல் :3
7. வேதநாயகம்பிள்ளை, அதே நூல், பெண்பார்க்கத்தூது அனுப்புதல் :4
8. வேதநாயகம்பிள்ளை, பெண்மானம், ப.6
9. வேதநாயகம்பிள்ளை, அதே நூல், ப.17
10. வேதநாயகம்பிள்ளை, நீதி நூல், இணைப்பு : 10 : 3
11. வேதநாயகம்பிள்ளை, பெண்மானம், ப.8
12. வேதநாயகம்பிள்ளை, அதே நூல், ப.8
13. வேதநாயகம்பிள்ளை, நீதி நூல், 11 : 46 : 3-4
14. வேதநாயகம்பிள்ளை, பெண்மானம், ப.6
15. வேதநாயகம்பிள்ளை, அதே நூல், ப.4

****

இனியர் - ஒரு - மருத்துவர்

புலவர்.மா.சின்னு,
வேலூர் (நாமக்கல்)

செந்தமிழில் உள்ள பழைய நூல்களுக்கு உரை எழுத வேண்டுமென்றால் உரையாசிரியர் இலக்கிய இலக்கணப்புலமை மட்டும் பெற்றிருந்தால் போதாது. கணித நூற்புலமை, வானநூற்புலமை, சோதிட நூற்புலமை முதலிய பல புலமைகள் பெற்றிருக்க வேண்டும். சுருங்கக் கூறின் நூலாசிரியர் பெற்ற புலமைகள் அனைத்தும் பெற்றவர்கள் எழுதும் உரையே சிறக்கும், நிலைத்து நிற்கும்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கு உரை கண்ட சான்றோர்களில் தலைமையான இடம் பெற்றவர் நச்சினார்க்கினியர். இவர் தொல்காப்பியத்திற்கும் உரை எழுதினார், பத்துப்பாட்டுக்கும் கலித்தொகைக்கும் குறுந்தொகையில் இருபது பாடல்களுக்கும் உரைகண்டதுடன் சீவகசிந்தாமணியாகிய காப்பியத்திற்கும் உரை கண்டார். இவற்றுள் இவருடைய குறுந்தொகை உரையே கிடைக்கவில்லை.

சீவகசிந்தாமணிக்கு இவர் கூறும் உரையில் மருத்துவப்புலமை உரைமகுடத்தில் பதித்தமணியாக ஒளிரக் காணலாம்.

தென்னையின் முற்றிய நெற்றுக்கள் விழுதலால் அருகில் இருந்த கமுக மரத்து உச்சியில் உள்ள தேனடைகள் கீறி பலாக்கனிகள் பிளந்து தேமாங்கனிகள் சிதறி வாழைப் பழங்கள் சிந்தும் ஏமாங்கத நாட்டின் வளங்கூறும் திருத்தக்கதேவர்.

வளைக்கையால் கடைசியர் மட்டு வாக்கலின்
திளைந்தவர் பருகிய தேறல் தேங்குழிக்
களிப்புவண்டு இளஅனம் கன்னி நாரையைத்
திளைத்தலின் பெடைமயில் தெருட்டும் செம்மற்றே (50)

உழவர் குலப்பெண்கள் தம்கையாலே மதுவை வார்த்தனர். அம்மதுவினை மள்ளர்கள் இடைவிடாது பருகியபோது சிந்தியபோது நிலத்தில் தேங்கிக் கிடக்க அப்போது அங்கு வந்த காம இன்பம் அறிந்த அன்னப்பறவை, அம்மதுவினை உண்டு மயங்கி, காம இன்பம் நுகர்ந்தறியாத நாரையைப் புணர்தலின் அதனைக் கண்டு ஒரு

பெண்மயில் தன் ஆண் மயிலைப் பார்த்து, 'நீ கள்ளுண்டு இதுபோல் மயங்காதே' என்று தெருட்டிற்று என்றார்.

இச்செய்புளின் விளக்கவுரையில் இனியர், பெடையென்றும் மயில் என்றும் பிரிக்க என்றெழுதி, இனி மயிலைக் கண்டால் கள்ளின் களிப்புத் தீரும் என்றலின் அப்பெடைமயில் தெருட்டிற்று என்றுமாம் என எழுதினார்.

இதனால் கள்ளுண்டவரின் போதையைப் போக்கும் மருந்து ஆண்மயிலின் அழகிய தோகைக்காட்சி என்றறிகிறோம். இனியரின் விளக்கம் அவருடைய மருந்துப் புலமையை வெளிப்படுத்தியது.

ஏமாங்கத நாட்டில் உள்ள ஊர்களையும் அவ்வூர்களில் உள்ள அன்னச் சாலைகளையும் வீடுகளையும் காட்டுகிறார் தேவர்.

> விலக்கில் சாலை யாவர்க்கும் வெப்பின் முப்பழச்சுனைத்
> தலைத்தணீர் மலரணிந்து சந்தனம் செய் பந்தரும்
> கொலைத்தலைய வேற்கணார் கூத்தும் அன்றி ஐம்பொறி
> நிலத்தலைய துப்பெலா நிறைதுளும்பும் ஊர்களே 75

'இந்நாட்டிலுள்ள ஊர்கள் தோறும் யாவர்க்கும் விலக்குதல் இல்லாத அடிசில் சாலைகள் (அன்னச்சத்திரங்கள்) உள்ளன. வெம்மையில்லாத சுனையில் காலையில் எடுத்த தண்ணீரில் பூவுமிட்டுச் சந்தனமும் இட்ட தண்ணீர்ப் பந்தர்கள் உள்ளன. வேல்போன்ற விழி பெற்ற மாதர் கூத்தாடும் இடங்கள் உள்ளன. மேலும் அங்கே ஐம்பொறிகளால் நுகரும் பொருள்கள் எல்லாம் நிறைந்து ததும்பும்' என்றார்.

இச்செய்யுளில் பயின்று வந்துள்ள 'முப்பழம்' என்பதற்குச் சாதாரண உரையாசிரியர்கள் உரை கூறின், முப்பழம் – மா, பலா, வாழைக் கனிகள் என்று எழுதிவிடுவர். "காய் மாண்ட தெங்கின் பழம் வீழ" (சிந்.31) எனத் தொடங்கும் நாட்டு வளப்பாடலில் இம்முக்கனிகளைத் தேவர் குறிப்பிட்டதை நினைவிற் கொள்ளாது எழுதி விடுவர்.

உரைத்திறனில் உயர்ந்து நிற்கும் இனியர், முன்பு முக்கனிகள் கூறப்பட்டதை நினைவிற் கொண்டு ஈண்டு (சிந்.75) முப்பழம் – கடு, நெல்லி, தான்றி என்பவற்றின் பழங்கள் என்று சரியாக எழுதினார்.

பண்டைத் தமிழர் நாவிற்கு நலந்தரும் மா பலா வாழைக் கனிகள் தரும் மரங்களை மட்டும் வளர்க்கவில்லை. உடலுக்கு நலந்தரும் – பிணிகளைப் போக்கும் மருந்து மரங்களையும் வளர்த்தனர் என்பதை உளங்கொண்டு கடு நெல்லி தான்றி என்று முப்பழத்திற்கு விளக்கந் தந்தார்.

கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் மூன்றனையும் காய வைத்துப் பொடி செய்து 'திரிபாலா' என்ற பெயரில் நாட்டு மருந்துக் கடைகளில் இன்றும் விற்கப்படுவதைக் காணலாம். இத்திரிபலா சூரணத்தை நாள்தோறும் இரவில் உண்டால் குருதி தூய்மை பெறும். நரம்புகள் வலிமை பெறும். கண்நோய் வராது. தெளிவான பார்வை உண்டு. சர்க்கரை நோய் வராது. இம் மருத்துவப் பயன்களை யெல்லாம் அறிந்வர் நச்சினார்க்கினயர். அதனால்தான் நோய் அறுத்தற்குக் கடு நெல்லி தான்றி சூழவளர்ப்பார்கள் என்றெழுதினார்.

ஆக்கந் தானே காரண முதற்றே தொல். சொல் : 21

நூற்பாவிற்கு இளம்பூரணர் 'க்டுவும் கைபிழி யெண்ணையும் பெற்றமையான் மயிர் நல்ல வாயின' என எடுத்துக்காட்டுத் தந்தார். இனியர் தாம் ஒரு மருத்துவ நூற் பயிற்சியில் தேர்ந்தவர் என்பது தோன்ற பின் வருமாறு தெளிவுடன் எழுதினார்.

கடுக் கலந்த கைபிழி எண்ணெயைப் பெற்றமையான்
மயிர் நல்லன ஆயின

கடுக்காய் கலந்து ஊறிய அல்லது காய்ச்சிய நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்தால் மயிர் நல்லவாக இருக்கும் என்கிற மருத்துவக் குறிப்பு இங்கே காணப்படுவதையும் ஒப்பு நோக்க வேண்டும்.

ஏமாங்கத நாட்டு அரசி விசையை ஓர் எழிலரசி. "வான் சுவை அமிர்தம் அன்னாள்" என்பான் அரசன் சச்சந்தன், அவளுடைய சிறுநுதலும் முகமும் – இளம்பிறையும் குளிர் முழுமதியும் கூடினபோல் இருக்குமாம். தொழுதற்கு வரங்கொடுக்கும் தொண்டையங்கனிவாயும் தூமுறுவலும் அழகொழுகும் மூக்கும் பெற்ற விசையையின் வடிவப் பொலிவு கண்டால் உருப்பசியும் (ஊர்வசியும்) இவளை அடைய யான்

ஆண்மகனாகப் பிறக்க வில்லையே என்று நினைந்து நினைந்து உருகுவாளாம். அழகெல்லாம் ஒருங்கே திரண்ட விசையை மேல் கொண்ட காதலால் (காதல்—எல்லாப் பொருளையும் நுகர்தற்குச் செல்லும் வேட்கை – இனியர்) அரசன் அந்தப் புரத்திலேயே அவளை முயங்கித் திளைத்தலைக் கூறும் தேவர்

காதலால் காமபூமிக் கதிரொளி யவரும் ஒத்தார்
மாதரும் களிறனானும் மாகுண மகிழ்ச்சி மன்றல்
ஆதரம் பெருகுகின்ற அன்பினால் அன்னம் ஒத்தும்
தீதிலார் திளைப்பின் ஆமான் செல்வமே பெரிதுமொத்தார்.

'மாதரும் (விசையை) களிறனானும் (சச்சந்தன்) மகிழ்ச்சியை உடைய முயக்கத்தால் மாகுணத்தை யொத்தும் அன்பினால் உளதாகிய மென்மையால் அன்னத்தை யொத்தும் கண் முதலிய அவயவ நுகர்ச்சியை ஆமானை (காட்டுப்பசு) ஒத்தும் தீதில்லாதவர்கள் இப்புணர்ச்சிக்கு முன்னர்ப் போகபூமியில் உள்ளார் செல்வமே பெரிதும் ஒத்தார்' என உரை கூறிய இனியர் "தீதிலாத்திளைப்பிற்" பாடமாயின் ஆமானை ஒத்தும் தீதிலா மாதரும் களிறனானும் என்க, ஆமான் நக்குங்கால் பிறக்கும் இனிமையே ஈண்டு உவமம் என்றார்.

ஆமான் நக்குதல் முதலில் இனிமை தந்து பிறகு உயிரை நீக்கும் என்கிற மருத்துவ அறிவைப் பெற்றவர்களே இங்ஙனம் உரையெழுத இயலும். ஆமான் பிற உயிர்களை நக்கி முதலில் சுகந்தந்து இறுதியில் உயிரைப் போக்குவதற்குக் காரணமாக இருப்பது போல் விசையை சச்சந்தனுக்கு இப்பொழுது இனிய சுகந்தருகிறாள். இறுதியில் இக்காதலே சச்சந்தன் மாள்வதற்குக் காரணமாகப் போகிறது என்பதைக் குறிப்பால் உவமை மூலம் உணர்த்துகிறார் தேவர் என்பதை நாம் அறிந்துகொள்ள இனியரின் மருத்துவப் புலமையுரை உதவுகிறது.

காப்பியத் தலைவனாகிய சீவகன் உணவு உண்ணும் மண்டபத்திற்குள் செல்வதைத் திருத்தக்க தேவர்

வெண்துகில் மாலை சாந்தம் விழுக்கலம் விதியிற் சேர்த்தி
நுண்துகில் திரைகள் சேர்ந்த நூற்றுலா மண்டபத்து
கண்திரள் முத்த மென்தோள் காவிக்கண் மகளிர் போற்றி
எண்திசை மருங்கும் ஏத்த இனிதினின் ஏறினானே 2734

துகில் மாலை சந்தனம் விழுக்கலம் (சிறந்த ஆபரணம்) நான்கினையும் அரசியலில் கூறியவாற்றிலே சேர்த்தி எண் திசையினின்றும் மகளிர் போற்றி எத்தத் துகில் திரைகள் தொங்கவிடப்பட்ட நூறடி உலாவுதலை உடைய அமுது செய்யும் மண்டபத்திற்குள் சீவகன் சென்றான்' என்றார்.

இச்செய்யுளில் 'நூற்றுலா மண்டபம்' என்று ஒரு மண்டபம் வருகிறது. இதற்கு நூறடி நீளமுள்ள உலாவுதற்கு ஏற்ற மண்டபம் என்று உரை எழுதுவதில் எவ்விதச் சிறப்பும் இல்லை. அவ்வாறு எழுதுவதால் நூலாசிரியர்க்கும் பெருமையில்லை உரையாசிரியர் திறனும் வெளிப்பட்டது. இங்கே இனியர் உண்டால் நூறடி உலாவுதல் வேண்டும் என்று மருத்துவ நூல் கூறியதனைக் கூறினார் என்றெழுதித் தேவரின் மருத்துவ நூலறிவையும் தம் மருத்துவ நூற் பயிற்சியையும் வெளிப்படுத்துகிறார்.

நடத்தல் பயிற்சி மேற்கொண்டால் சில நோய்கள் வாரா. வந்த நோய்களும் குறையும். விலகும் என இன்றைய மருத்துவர்கள் கூறக் கேட்கிறோம். உண்டகளைப்புத் தொண்டர்க்கும் உண்டு என்றொரு பழமொழியைக் கூறிக் கொண்டு பலர் உணவு உண்ட பின் உடனே படுத்துவிடுகின்றனர். இச்செயல் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். இனியர் உரையைப் படித்ததன் நினைவாக உண்டபின் நூறடி நடக்க வேண்டும் என்ற மருத்துவ விதியைக் கடைப்பிடித்து உடலோம் பல் நன்று.

நூலாடை வருவதற்குமுன் பண்டைய மக்கள் தோலாடை உடுத்தினர். ஆடு புலி மான் இவற்றின் தோல்கள் பயன்படுத்தப்பட்டன. யானையின் தோலை எவரும் ஆடையாகப் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள் என்பதை இனியரின் உரை விளக்கத்தால் அறிய முடிகிறது.

சீவகன் சமண முனிவரை நோக்கி, 'அடிகளே' பிறப்பறுமாறு அறியாதேன். எப்பிறப்புகளிலும் செய்து கொண்ட தீவினையென்னும் இருள் கெடும்படியாகச் சிலநாள் நின்று தவஞ்செய்து பின்னர் எரியுநீள் சுடராகிய ஞானத்தை எய்தும்படி எனக்கு அருளுமின் என்ற போழ்து சமண முனிவர் அறிவுரை கூறுகிறார்.

வேள்வியைக் கண்படுத்தும் வெவ்வினைசெய் ஆடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோல்
கோளிமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்தும் இன்னணமே
நாள்உலப்பித் திட்டார் நமரல்லா தார்எல்லாம் 2787

உணர்வு இல்லாத மக்கள் தமக்கு நன்மையைத் தரும் என்று போர்த்த யானையின் பசுந்தோல் தம் உயிர்க்கு கேடாயினாற் போலக் கொடிய மாக்கள் நமக்கு நன்மை தரும் என்று விலங்குகளை விருந்திடுதற்கு வாளினால் கொன்றும் வேள்வியிடத்தே கொன்றும் வலையினிடத்தே கொன்றும் இப்படியே தம் வாழ்நாளைத் தேய்ப்பித்து விட்டார் நம்முடைய தமரல்லார் எல்லாரும்.

இச்செய்யுளில் வந்துள்ள "வாரணத்தின் ஈருரிபோல்" என்ற தொடருக்கு விளக்கவுரை எழுதும் இனியர் யானையின் பசுந்தோல் பிறர் உடம்பில் பட்டால் கொல்லும் என்றுணர்க் என்றார். மருத்துவ நூல் பயின்றாரன்றி வேறு எவரும் இவ்விளக்கந் தர இயலாது. சீவக சிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவர் பன்மொழிப் புலமையும் பன்னூற் பயிற்சியும் உடையவர். இந்நூலுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியரும் பன்மொழிப் புலமையும் மருத்துவம் உள்ளிட்ட பல்துறைப் பேரறிவும் உடையவர்.

****

திருவாசகத்தில் உவமைகள்

முனைவர்.ச.நடராசன்,எம்.ஏ., பி.டி.,
தஞ்சாவூர்.

பன்னிருதிருமுறைகளுள் எட்டவதாகிய திருவாசகம் மணிவாசகப் பெருந்தகையால் பாடப்பெற்றது. இத்திருவாசகம் ஓர் அருள் நூலாகவும் அநுபவ நூலாகவும் விளங்குகிறது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு சொல்லும் பழுத்த மனத்து அடியவரின் பண்பட்ட உள்ளத்திலிருந்து சிவபோத முதிர்ச்சியால் வெளிப்பட்டது. இந்நூல் கற்றாரையும் கேட்பாரையும் பிணிக்கும் பெருமை பெற்றுச் சொல் நடையும் பொருள்நடையும் பின்னிப் பிணைந்து நெஞ்சை உருக்கிக் கண்ணீர்பெருக்கும் கனிவை உடையது. இந்நூலில் பொருளைப் புலப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகள் சிலவற்றைக் காண்போம்.

சீலம் இன்றி, நோன்பு இன்றிச்
செறிவே இன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறிஏறத்
கோலங்காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே !

(ஆனந்தமாலை, பா.3)

நல்லொழுக்கமின்றி, விரதமின்றி, அன்பில்லாமல், அறிவில்லாமல் தோற்பதுமையின் கூத்தாட்டத்தைப்போலச் சுற்றி அலைந்து பயனற்றுக்கிடக்கும் எனக்குத் தன்பால் விருப்பங்காட்டி நன்னெறி காட்டிப் பிறவிக்கு மீளாது போய்ச்சேரும் வழியிலே மேற்கொண்டு செல்லுமாறு தனது திருவடிவத்தையுங் காட்டி ஆட்கொண்ட பெருமானைக் கொடுமையுடையேன் எந்நாள் போய்ச்சேருவது என்கிறார் மாணிக்கவாசகர். இப்பாடலில் வரும் 'தோற்பாவைக் கூத்து' உவமை சைவசித்தாந்த சாத்திர-நூல்களிலும் மெய்ப்பொருளை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மனோமய தோசத்தை ஆன்மா செலுத்தற்குத் தோற்பாவைக் கூத்து உவமையாக்கப்பட்டுள்ளதைச் சிவஞான சித்தியார் சுபக்கத்தில்,

தோற்பாவைக் கூத்துந் தொல்லை மரப்பாவை இயக்க முஞ்சாத்
தேர்ப்பாரின் செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்திதானும்
பார்ப்பாய வேடங்கட்டி ஆடுவோர் பரிசுபோலும்
ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்று ஆட்டும் ஆறே

(சிவஞானசித்தியார், சுபக்கம், பா.214)

என்ற பாடலில் காணலாம்.

இருமுச் சமயத் தொரு பேய்த்தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன

(திருவண்டப்பகுதி, அடி.79 – 82)

என்ற திருவாசகத்துத் திருவண்டப்பகுதியில் அறுசமயங்களாகிய கானல் நீரினை அணுகி விடாயுந்தப் போந்து நீண்ட கண்களை உடைய மான்கூட்டம் போலக் கதியடையும் விருப்பால் ஆராய்ச்சியுடன் சென்ற சிற்றறிவுயிர்கள், அக்கானல் நீரினைத் தமது அகன்ற பெரிய வாயினால் பருகியும், நடந்த தளர்ச்சியும் மிகக்கெடுதியான தாகமும் நீங்கப்பெறாது உழன்றன என மணிவாசகர் அறுசமயங்களுக்குப் பேய்த்தேரினை உவமையாக்கி உரைத்துள்ளார்.

அறிவு விளக்கம் பெறாதநிலையில் அசத்தான கருவிகளைச் சத்தென மதிப்பது கானல்நீரை உண்மை நீரென்று மயங்குவதற்கு ஒப்பாகும் என்பதனை,

பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்று அணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின் – வாய்த்து அதனைக்
கண்டுணர்வார் இல்வழியின்காணும் அசத்து இனிமை
கண்டுணர்வார் இல்லது எனக் காண்

(சிவஞானபோதம் – நூற்பா 7, அதி.2: வெ.41)

என்னும் சிவஞானபோத உதாரண வெண்பா விளக்குகிறது.

பூவின் நாற்றம் போன் றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கையொழியச் செய்த வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
(திருவண்டப்பகுதி, வரி : 115 – 119)

என்ற திருவாசக வரிகளில் மலரினின்று எழுகின்ற மணம்போல மேம்பட்டு உலகெங்கும் நீக்கமற நிறைந்து எல்லாவற்றிற்கும் சார்பாய்ப் பொருந்திய பெருந்தன்மையை இக்காலத்தே எனக்கு எளிதின் வந்து அறிவுறுத்தி அருளி அழியுந்தன்மையுடைய உடம் பெடுக்கும் பிறிவியானது நீங்கும்படி செய்த ஞானமுதல் இற்றைநாளிலே என்பால் எளிதாக வந்தமர்ந்தோன் அவனுக்கு வணக்கம் என்று பேசப்பட்டுள்ளது. இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள 'பூவில்' நாற்றம் என்னும் உவமை சித்தாந்த சாத்திர நூல்களிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, சிவஞானபோதத்தில் உயிர்சத்துமின்றி அசத்துமின்றி இருக்கும் இயல்பிற்குப் பூவில் மணம் விளங்கித் தோன்றாமலும், சூனியமில்லாததுவுமாய் இருப்பது உவமையாக்கப்பட்டிருப்பதை,

அருஉருவம் தான்அறிதல் ஆய்இழையாய் ஆன்மா
அருஉருவம் அன்று ஆகும் உண்மை – அருஉருவாய்த்
தோன்றிஉடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு
(சிவஞானபோதம், நூற்பா – 7, அதி.3, வெ : 42)

என்ற பாடலில் காணலாம்.

குருமுதல்வனின் திருவடிகளை உருவை விட்டகலாத நிழல்போல் முன்வணங்கியும் பின் தொடர்ந்தும் பிரிவின்றி நிற்கவேண்டும் என்ற உவமை

சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை
(திருவகவல், வரி : 77 – 79)

என்ற போற்றித் திருவகல் வரிகளில் பயில்வதைக் காணலாம். இந் 'நிழல்' உவமையை சைவசித்தாந்த கருத்தை வெளிப்படுத்துவதற்கேற்ப வெயிலால் வருந்தியவன் குளிர்ந்த நிழலைச் சேரவேண்டும் என எவரும் சொல்ல வேண்டுவதில்லை, அவனாகவே விரைந்து ஓடிக் குளிர்நிழலை அடைவதைப்போல மலங்களினால் உற்ற துன்பங்களால் வருந்தியவன் திருஅருளைக் கண்டதும் தானேவிரைவில் அதனை அடைந்து அதுவாய் நிற்பான் என்று

தூநிழல் ஆர்தற்கு ஆரும்சொல்லார் தொகும்இதுபோல்
தான் அதுவாய் நிற்கும் தாம்

(திருவருட்பயன், பா.61)

என்ற திருவருட்பயன்பா மூலம் உணரலாம்.

எப்பொருளினுள்ளும் நடுவிலும் கீழும் மேலுமாய் எப்பக்கத்தும், எள்ளில் எண்ணெயைப்போல வியாபித்து நிற்பவனாகிய சிவபெருமான் அவனது மெய்யன்பர் போலத் தன்னையும் வலிய அழைத்துப் பணிகொள்ளும் ஆற்றலுடையவன் என மணிவாசகர் கூறுவதை,

கொள்ளுங் கில்எனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
தள்ளுங் கீழுளமேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே

(திருச்சதகம், பா.46)

என்ற பாடலில் காணலாம். திருவாசகத்தில் பயின்றுவரும் 'எள்ளும் எண்ணெயும்' உவமை எள்ளில் எண்ணெய் பிரித்தறியப்படாது நிற்பதுபோல யோகியருக்கு இறைவன் பிரித்தறியப்படாது இயைந்து உடனாய் நிற்பன் என்னும் கருத்து சைவசித்தாந்த சாத்திரமான சிவஞானசித்தியார் சுபக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை

இந்தனத்தில் எபிபாலில் நெய்பழத்தில் இரதம்
எள்ளின்கண் எண்ணெயும் போல் எங்கும் உளன் இறைவன்

(சிவஞான சித்தியார், சுபக்கம், பா.303)

என்ற பா மூலம் உணரலாம்.

****

சொல் பற்றிய விளக்கங்களும் கருத்துக்களும்

எஸ்.ஜெயசுதா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுவைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

சொல்லாராய்ச்சி பற்றி முதன் முதலில் நூல் எழுதி வெளியிட்ட பெருமை மாகறல் கார்த்திகேய முதலியாரையேச் சாரும் எனலாம். 1913ம் ஆண்டில் வெளி வந்த அவரது மொழி நூலில், சொற்கள் பிறப்பு பற்றிப் பல ஆய்வுகளைச் செய்துள்ளார். உலகில் உள்ள எல்லாச் சொற்களும் "சுல்" என்னும் அடிப்படைச் சொல்லில் இருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

சொல் :

"சொல்" என்பது பொருள் பயக்கும் இலக்கணத்தை அளவையாகக் கொண்டு வகுக்கப்பெறுவது என்று சில அறிஞர்கள் கூறுவர். மேலும், "சொல்லின் அடிப்படை வரைவிலக்கணமே பொருள் உணர்த்துவது" என்றும், "சொல் என்பது பொருள் தரக்கூடிய ஒரு கூறு" என்றும் கூறுவர். மேலும் சொல்லை ச் + ஒல் எனப்பிரித்து 'ச்' என்பதை 'நா' வாகவும் 'ஒல்' என்பதை 'ஒலி' யாகவும் கொண்டு, சொல் என்ப்தற்கு "நாவால் ஒலிக்கப் பெறும் தொடரிசை" என்பது பொருள் என்றெல்லாம் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன.

சொல்லை உணர்த்தும் பிற சொற்கள் :

கிளவி, மொழி, உருபன், அடிச்சொல், வார்த்தை, ஒட்டு நிலைச்சொல், தொடர்மொழி, தொகை, எழுத்து, பொருள், சொற்றொடர், ஒலியன், வாக்கியம், விகுதி என்பவை சொல்லை உணர்த்தும் பிற சொற்கள் ஆகும். மேலும், தமிழ்ப் பேரகராதியில் சொல் என்பதற்குப் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை எழுத்தினோசைச் சொல், கட்டளை, கள், செந்நெல், செந்நெற்கதிர், சொல்லென்னேவல், நெல், புகழ், பேச்சு, மொழி, வாக்கியம் என்பனவாகும்.

தொல் காப்பியத்தில் 'சொல்' கையாளப்பெறும் முறைகள் :

தொல்காப்பியத்தில் 'சொல்' என்பது பல பொருட்களில் கையாளப்படுகிறது. "னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" என்ற நூற்பாவில் 'சொல்' என்பது உருபனையும், தருசொல், வருசொல் ஆயிரு கிளவியும் என்ற இடத்தில் அடிச்சொல் என்ற பொருளையும் 'பன்மை

உரைக்கும் தன்மைச்சொல்லே' என்னுமிடத்தில் ஒட்டுக்கள் என்ற பொருளையும் 'நிலனும், பொருளும், காலமும்' என்ற தொடரில் சொல் என்ற பொருளையும் தருகிறது என்பர்.

இவை தவிர 'சொல்' என்பது தொடர்மொழி என்ற பொருளிலும், தொல்காப்பியத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளதாகக் கருதுவர். "வண்ண சினைச் சொல்" என்பதற்கு உரையாசிரியர்கள் 'செங்கால்நாரை' என்பதனை உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். இது ஒரு தொடர்மொழியே என்றும் கூறுவர்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறது தொல்காப்பியம். எழுத்துக்கள் தனித்தோ அன்றித் தொடர்ந்தோ நின்று பொருள் உணர்த்துமாயின் அது 'சொல்' எனப்படும் என்பார் தொல்காப்பியர். இவர் 'சொல்' என்பதற்குப் பயன்படுத்தியுள்ள பொருளிலெல்லாம் இளம்பூரணர் 'சொல்' என்பதைப்பயன் படுத்தியுள்ளாரா? என்று நோக்கினால் இல்லை என்றே கூறலாம்.

தொல் காப்பியர் 'சொல்' என்பதைத் தனியுருபன், கட்டுருபன் ஆகிய இரண்டு பொருளிலும் கையாண்டுள்ளார். ஆனால் இளம்பூரணர் சொல்லுக்கு விளக்கம் தர முற்படுகையில் 'சொல்' என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை என விளக்கம் கண்டார். திரு.பாலசுப்பிரமணியனின் 1981ம் ஆண்டு அகராதிப்படி, தொல் காப்பியத்தில் 'கிளவி' என்பது கிட்டத்தட்ட 280 முறையும், சொல் என்பது 134 முறையும் மொழி என்பது 128 முறையும் கலைச்சொற்களாக வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. திரு.திண்ணப்பன் அவர்கள், சொல்லதிகாரத்தில், கிளவி என்பது 7 பொருள்களிலும் மொழி என்பது 4 பொருள்களிலும் பயின்று வந்துள்ளதாகக் கருதுகின்றார்.

அதாவது, கிளவி என்பது வார்த்தை, அடிச்சொல், எழுத்து, ஒட்டு, நிலைச்சொல், தொகை, சொற்றொடர், பொருள் என்ற பொருள்களிலும், மொழி என்பது வார்த்தை, அடிச்சொல், ஒட்டுநிலைச்சொல், தொகை என்ற 4 பொருள்களிலும் வந்துள்ளது என்பது சான்றாகும்.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்"

என்ற நூற்பாவழி சொல் என்பது தன்னின் வேறாகிய பொருளறியப் படுதலும், பொருளறியப்படாது அச் சொல் தானே அறியப் படுதலும் என்ற இரண்டும் சொல்லாகும்.

சான்றாக

பண்டுகாடுமன், சாத்தன் வந்தான், உறுகால் என்பனவற்றால் பொருளுணரப்பட்டவாறும், நீயென் கிளவி, செய்தெனச் தஞ்சக் கிளவி, கடியன் கிளவி என்பனவற்றால் பொருளுணரப்படாது. அச்சொல் தாமே உணரப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது.

சொல் பற்றி உரையாசிரியர்களின் கருத்து :-

இளம்பூரணர் :

சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை என விளக்கம் கண்டார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் :

'எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருள் தன்மையும் ஒருவர் உணர்வதற்குக் கருவியான ஓசையே சொல்' என நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

சேனாவரையர் :

"கிளவி, சொல், மொழி என்பன தொடக்கத்தில் ஒரு பொருட்கிளவி" என சேனாவரையர் கூறுகிறார். அதாவது கிளவி என்பது பொருள் தரும் நிலையில் கிளக்கப் படுவனவாகும். ஓர் எழுத்தை மொழிப்படுத்துக் கூறினும் கிளவியாம் 'சொல்' என்பது பொருள் பயக்கும் இலக்கணத்தை அளவையாகக் கொண்டு வகுக்கப் பெறுவதாகும். மொழி என்பது எழுத்தை அளவையாகக் கொண்டு வகுக்கப்பெறுவதாகும் என விளக்கம் தருகிறர் சேனாவரையர்.

மொழி, சொல், கிளவி என்பவை வெவ்வேறு சிறப்புப் பொருளுடையவை எனினும் யாப்பினுள் ஒரு பொருட் கிளவி போல ஆளப்படும் என்று கூறுகிறார். இவர் சொல்லுக்கு விளக்கம் தர முற்படுகையில், "எழுத்துக்கள் தனித்து நின்றும் தொடர்ந்து நின்றும் பொருளுணர்த்தும் இயல்பினவாயினும் தனித்து நிற்கும்" எழுத்துக்கும், சொல்லில் தொடர்ந்து நிற்கும் எழுத்துக்களுக்கும் இடையில் நுட்பமான வேறுபாடு உண்டு எனக்கூறுகிறார்.

தொல்காப்பியர் :

ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும் என்ற நூற்பாவில் எழுத்து என்பதைச் 'சொல்' என்ற பொருளில் தொல்காப்பியர் ஆண்டுள்ளார்.

நன்னூலார் :

எழுத்துக்கள் தனித்து நின்ற நிலையில் எவ்வெவ்விலக்கணங்களை உடையனவோ, அவ்வவ்விலக்கணங்களையே சொல்லாகும் போது பெறும் என்பர் நன்னூலார்.

தெய்வச்சிலையார் :

"எழுத்தினால் இயன்று பொருள் அறிவிப்பது சொல்" எனத் தெய்வச்சிலையார் கூறுகிறார். இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்கென 'சொல்' பற்றிய வரையறைகளைக் கூறியிருக்கின்றனர்.

தொல்காப்பியத்தில் கிளவி :

கிளவி என்பது தொல்காப்பியத்தில் (தொல்காப்பியம் முழுமையிலும்) வார்த்தை என்ற பொருளில் மிகுதியாக ஆட்சி பெறுகிறது. மொழி என்பது எழுத்ததிகாரத்திலும், 'சொல்' என்பது சொல்லதிகாரத்திலும், மிகுதியாக ஆட்சி பெற்றுள்ளது என திரு.'திண்ணப்பன்' சுட்டிக்காட்டுகிறார். ஆயினும் சொல்லதிகாரத்தில் 'எழுத்து' என்பது விகுதி அல்லது ஒட்டுநிலைச்சொல் என்ற பொருளில் 2 தடவை வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சொல்லதிகாரத்தில் 'சொல்' என்பது 'உருபன்' என்ற பொருளிலும், வாக்கியம் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது.

சொல்லும் பொருளும் :

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும்'

என்ற நூற்பாவில் 'சொல்' என்பதற்குப் 'பொருள்' என்றே உரையாசிரியர்கள் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே' என்ற சூத்திரத்தில் 'மொழி' என்பது சொல்லைக்குறிப்பதாக உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளதும் அறியத்தகுந்தது.

ஒரு பொருளைக் கருதி உணர்வதற்கு அப்பொருளையே அடிப்படையாகக் கொண்டு சொற்கள் தோற்றுவிக்கப்படுதலின் பொருளைச் சுட்டாத வெறுமைச் சொல் ஒன்றில்லை என்பது நூலோர் முடிவாகும்.

"சொல்" என்பதற்குச்சமய ஆற்றலால் பொருள் உணர்த்தும்போது, சொல் இப்பொருளையுணர்த்துக, என இறைவன் ஆணையின் காரணமாகப் பொருள் உணர்த்தி வருகிறது என்பர்.

வாக்கியங்களும் தொடர்களும் பொருள் உடையதாகவும், பொருள் அற்றதாகவும் இருக்கலாம் எனக்கூறினாலும் சொற்கள் பொருள் உடையவை அல்ல எனறு நாம் கூறவதேயில்லை.

வருணனை முறை :

'சொல்' என்பது வடிவம், பொருள் என்று பிரிக்க முடியாத இரண்டு கூறுகளால் ஆனது. சொல் ஆய்வில் வடிவத்தை வைத்துக் கொண்டு பொருளை விளக்குவதா? பொருளை எடுத்துக்கொண்டு வடிவத்தை விளக்குவதா? போன்ற கேள்விகளை எழலாம். உரையாசிரியர்கள் பலரும் வடிவத்திலிருந்து பொருள் விளக்கப்பட்டுள்ளதாகவே குறிப்பிட்டுள்ளார்கள். தெய்வச்சிலையார் 'சொல், பொருள்' என்ற இரண்டையும் கொண்டு விளக்கியுள்ளார். மண்ணினால் இயன்றதோர் பூதம் எனவும், 'நிலம்' என்ற சொல்லின் தன்மையை ஆராய்ந்தால் அது பெயர்ச்சொல் என்றும் வழங்கப்பெறுவதாகத் தெய்வச்சிலையார் கூறுகிறார்.

சொல் பற்றி மொழியாளர்களின் கருத்து :

சொல்லும் பொருளும் பிரிக்க முடியாதபடி சேர்ந்தே உள்ளதாக மொழியாளர்கள் கருதுவர். 'சொல்' என்பதற்கு அட்டரன்ஸ் (Uttarance) என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இச்சொல் வார்த்தையாகவோ, தொகையாகவோ, தொடராகவோ, வாக்கியமாகவோ இருக்கும் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏனெனில் பேச்சு மொழியை எடுத்துக்கொண்டு ஆராய்கின்ற, மொழி ஆராய்ச்சிக்குரியதரவில், 'உருபன்', அடிச்சொல், தொடர் வாக்கியம் போன்று எதுவும் இருக்காது. மொழி ஆய்வாளனே தன்னுடைய ஆய்வு வசதிக்காகதான் வரையறுத்த பொருளில் பயன்படுத்தும் அலகுகள் இவை என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். அட்டரன்ஸ் என்பதற்குத் தமிழில் 'கிளவி' என்ற கலைச் சொல்லைப்பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

சொல் பற்றி சில முரண்பாடுகள் :

சொல் என்பது, சொல் ஆய்வு ஆகி இலக்கண ஆய்வையும் குறிக்கிறது.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் எல்லாச் சொல்லும் பொருளைக்குறிக்குமே தவிர எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சொல், பல்வேறு சூழல்களில் பல்வேறு பொருளைக் குறிக்கும். எனவே, சொல்லும் பொருளும் ஒன்றுதான் எனக்கூற முடியாது.

சான்றாகப் 'பார்த்தல்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். பார்த்தல் என்பது ஒரு சொல்தான். ஆனால், பல பொருளில் அச்சொல் கையாளப்படுகிறது. அவன் பார்வை சரியில்லை, அவன் பார்க்கிறதைப்பாரு, தொலைக்காட்சியைப் பார்க்கிறான், வெளியே வா பார்த்துக்கறேன், குழந்தையை பார்த்துக்கொள், பார்க்கலாம், பார்க்கலாம், என இவ்வாறு ஒரு சொல் பல பொருளில் வரும்போது, அச்சொல் வரும் சூழ்நிலையை வைத்துதான் பொருள் கூறமுடியும்.

முடிவுரை :

எல்லாச்சொற்களும் பொருள் குறித்தே வரும். அவ்வாறு வரும்போது, அச்சொல் தன் தகுதிப்பாட்டினையும் உணர்த்தும், பொருளையும் உணர்த்தும், அங்ஙனம் பொருள் உணர்த்தும்போது வெளிப்படையாகவும், குறிப்பாகவும் உணர்த்தும். தமிழில் சொல் பற்றியும், சொல் வகைப்பாடு பற்றியும் இன்னும் தீவிர ஆராய்ச்சி நடைபெறவில்லை என்றே கூறலாம். தொல்காப்பியர் காலத்திற்குப்பிறகும் இலக்கண ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஆயினும் "மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்றோ" என்ற நூற்பாவிற்கிணங்க, சொல் என்பதோ, கிளவி மொழி, எழுத்து என்பதோ இன்று வரைக்கலைச் சொற்களாக உள்ளனவே தவிர நிலைபேறு அடையவில்லை என்பது கண்கூடு.

பார்வை நூல்கள் :

1. தொல்காப்பியம்
2. சொல்லியல் – சூ.இன்னாசி
3. சொல்லதிகார ஆராய்ச்சி (பகுதி – 1)

❄❄❄❄❄❄❄❄

சைவ எல்லப்ப நாவலரின் உரைத்திறன்

வே.ராஜேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

முன்னுரை

இன்றைய ஆய்வுலகில் உரையாசிரியர்கள் சிறப்பிடம் பெற்று வருகின்றனர். உரை மரபுகள் பற்றியும், சிறந்த உரையாசிரியர்கள் பற்றியும், உரை நயங்கள் பற்றியும் நூல்கள் பல வெளியாகியுள்ளன. ஒரு நூலுக்கு உரை எழுதும்போது, பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை அறிந்து எழுதினால்தான் உரையாசிரியனின் செயல் முழுமையமையும். அங்ஙனம் செயல்பட்டுயர்ந்த எத்தனையோ உரையாசிரியர்களைப் பற்றித் தமிழுலகம் பேசி வந்தாலும், இன்றும் பலரும் அறிய வெளிச்சத்திற்கு வராதவர்களாய் பலர் இருக்கவே செய்கின்றனர். அவர்களுள் ஒருவரான சைவ எல்லப்ப நாவலரின் உரைத்திறனை எடுத்தியம்பும் சிறு முயற்சியாக எழுந்ததே இக்கட்டுரை.

வீரை கவிராஜ பண்டிதர் இயற்றிய 'சௌந்தர்யலகரி' எனும் நூல் ஒன்றிற்கே நாவலர் உரை செய்ததாக நம்பப்படுகிறது. அவ்வுரையே இவ்வாய்வுக்குரிய பொருளாகக் கையாளப்படுகிறது.

உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்தில் தோன்றிய சான்றோர் பலரும் உலகம் வாழ, மக்கள் இன்புற்றிருக்க இலக்கியங்களைப் படைத்தளித்தனர். இலக்கணங்களை வகுத்துக் கொடுத்தனர். சமய நூல்களும் தோன்றின. இவை தோன்றிய காலத்தில் எல்லோர்க்கும் விளங்கும் நிலையிலிருந்தன. உரையும் விள்க்கமும் இல்லாத நூல்களே அனைவரும் கற்கும் நிலையில் அமைந்தன. நூல்களுக்கு உரை எழுதாமல் வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி கற்றுப் புலமை பெறும் வழக்கம் அக்காலத்தில் இருந்து வந்தது என்பதனை 'நாப்பாடம் சொல்லி நயம் உணர்வார்' எனும் நாலடியின் வரிகளால் உணரலாம் என்பார் மு.வை.அரவிந்தன்[1] வாய்மொழிவழி வளர்ந்து வந்த உரைகள் ஏடுகளில் எழுதப்பட்ட பின்னரும்

பழைய மரபைப் பிக்பற்றி வந்தனர். இறையனார் அகப்பொருள் உரையும், சேனாவரையர் தொல்காப்பியம் – சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும், பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும், காலிங்கர் திருக்குறளுக்கு எழுதிய உரையும் ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினா விடையாகவே அமைந்துள்ளன.

வழிவழியாக நூல்களுக்கு உரை எழுதியவர்கள் தொடக்கத்தில் விரிவான உரையோ விளக்கமோ எழுதவில்லை. முதன்முதலில் அருஞ்சொற்களுக்கான பொருளை எழுதினர். பின்னர் சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் வகையையும் எழுதினர். சிலம்பிற்கு முதலில் அரும்பதவுரை தோன்றியது. புறநானூற்றின் பழையவுரை பொழிப்புரையாகவே உள்ளது. பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை சுருக்கமாகவே உள்ளது. அகநானூற்றிற்குப் பழைய உரை குறிப்புரையாகவே உள்ளது.

காலம் செல்லல் செல்ல கருத்துக்கள் வளர்ந்து விரிவுரையும், விளக்கவுரையும் தோன்றின. எடுத்துக்காட்டும் மேற்கோள்களும் பெருகின. உரைநடையில் மட்டுமின்றி செய்யும் வடிவிலும் சில உரைநூல்கள் தோன்றின.

ஒருவர் எழுதிய நூலுக்குப் பிறர் உரை எழுதிய மரபு போய் நூலாசிரியரே உரை எழுதும் முறை தோன்றியது. நூலாசிரியரே உரை எழுதும் வழக்கம் வடமொழியாளரிடம் உண்டு. இதனைப் பிரயோக விவேகம் 'வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார்' என்று கூறுவதால் அறியலாம் என உரை மரபுகள் எனும் நூல் குறிப்பிடுகிறது. தமிழ்மொழியில் நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்கு வித்திட்டவர் புறப்பொருள் வெண்பாமாலை எழுதிய ஐயனாரிதனார் ஆவார். 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சதர் 'பிரயோக விவேகம்' எனும் இலக்கண நூலை இயற்றித் தாமே அதற்கு உரையும் எழுதினார். இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத தேசிகரும், இலக்கணக்கொத்து இயற்றிய சாமிநாத தேசிகரும் தம் நூல்களுக்குத் தாமே உரையெழுதியுள்ளார்.

உரையாசிரியர்கள் தமக்கு முன் உரை எபதியவர்கள் கூறிய கருத்துக்களுக்கு மறுப்புரை கூறி, தம் கருத்தை நிலைநாட்டுவது வழக்கம். திருவாரூர் வைத்தியநாததேசிகர் எழுதிய 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை மறுத்து, சிவஞான முனிவர் 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் பெயருடன் மறுப்புரை எழுதியது அவ்வகையைச் சாரும்.

பக்தி இலக்கிய நூல்களுக்கு உரை எழுதுதல் கூடாது என்ற கருத்து தமிழகத்தில் நெடுநாளாக இருந்து வந்தது. இருப்பினும் வைணவ, நூல்களுக்கு உரையும் விளக்கமும் தோன்றின. சைவ சமய நூல்களுக்கு இத்தகைய முயற்சி பழங்காலத்தில் மேற்கொள்ளப்பட்டவில்லை. சைவப் பெரியோர்கள் ஒதுங்கி விட்டனர். இருப்பினும் காலப்போக்கில் அருட்பாடல்களைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்று அறிஞர் சிலர் முயன்று உரை கண்டனர். பின்னர் தொகுத்துக் காணும் போக்கும் ஆர்வமும் வளர்ந்தன. மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அடிக்குறிப்பு – வினாவிடைகள் ஆகியன தருதல், நயமான பகுதிகள் – உவமைகள் – மேற்கோள்கள் – பழமொழிகள் ஆகியவற்றைத் திரட்டித் தருதல் போன்ற புதிய முயற்சிகளும் வளர்ந்தன. இவை மேன்மேலும் வளரும் என்பதில் ஐயமில்லை.

சைவ எல்லப்ப நாவலரின் வரலாறு :

கவிராஜ பண்டிதரின் 'சௌந்தரியலகரி' எனும் நூலுக்கு உரை செய்தவர் சைவ எல்லப்ப நாவலர் என்பது உரையாசிரியர் பெயரைக் குறிக்க எழுந்த செய்யுளால் விளங்குகிறது.

'பிறைபுனைந்து அருளும் சிவன்தனது உவகைப்
பெருக்கென வடமொழி முனிவன்
அறைசவுந் தரிய லகரியைத் தமிழால்
அருள்கவி ராசபண் டிதன்தன்
இறைமனம் கருதித் தாழைமா நகரின்
நிலைபெற வாழ்கவி எல்லான்
இறைஅளவு எனினும் தவறிலாது உரைதேர்ந்து
எழுதினன் எழில் விளக்கு எனவே'[3]

என்பதும் அது.

இவர் தாழையாநகரார் என மேற்கூறிய செய்யுள் கூறுகிறது. திருவெண்காட்டுப் புராணம் பதிப்பித்தோர் திவ்யகவி சைவ எல்லாப்ப நாவலர் வரலாறு என்று எழுதியதுள் இவர் திருவெண்காட்டின் தென்மேற்கில் ஒரு கடிகை தூரத்தில் காவிரியின் வடகரையிலுள்ள இராதா நல்லூரிலே பிறந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வூர்தான் எனத் தெரிந்து கூறுவதற்கு ஆராதங்கள் இல்லை. இவ்வரலாறு இவர் கார்காத்த வேளாளர் குலத்திலே காலிங்கராய கோத்திரத்திலே பிறந்தவர் என்றும், தருமபுர ஆதீனத்தை அடுத்துச் சாத்திரத் தேர்ச்சியுற்று மஹா சந்திதானத்தால் 'திவ்யகவி எல்லப்ப நாவலர்' என்று பெயர் கொடுக்கப்பட்டவர் என்றும் கூறுகிறது.

உரை நூல்களுள் வேறொன்றும் இவர் செய்ததாக வழங்கக் காணவில்லை. மேலும் இவர் செய்த நூல்கள் அருணாசல புராணம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், என்னுத் திரிசிராமலைப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், திருவாரூர்க்கோவை, திருவருணைக் கலம்பகம், திருவருணையந்தாதி ஆகியனவாகும்.

காலம் :

இவர் பிள்ளைப் பெருமான் ஐயங்கார் காலத்தவர் என்றும், இருவரும் ஒரே ஆசிரியரிடத்துக் கல்வி பயின்றவர் என்றும், திருவரங்கக் கலம்பகமும் திருவருணைக்கலம்பகமும் ஒரே காலத்துச் செய்யப்பட்டன என்றும் சிலர் கூறுவதுண்டு. அஷ்டப்பிரபந்தத்திற்கு முகவுரை எழுதிய ஸ்ரீமான் குப்புசாமி முதலியாரவர்கள் வரையறுத்து உரைத்தபடி ஐயங்கார் காலம் 12-ஆம் நூற்றாண்டின் இடைக்காலமாயின் இருவரும் ஒரே காலத்தவர் என்னும் கூற்று பிழையாகும். எனவே நாவலர் பிற்காலத்தவர், 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடுமென உத்தேசமாகக் கூறலாமேயன்றி, வரையறுத்து இதுதான் இவர் காலம் என்பதற்குத் தக்க ஆதாரம் ஏதுமில்லை என்பது அறிஞர்கள் கருத்து.

(தொடரும் . .)

****

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24 நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு

நூலகர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005.

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ. 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த,வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
பரணர் – ஆசிரியா.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ. 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ்.சண்முகனார்	ரூ. 60 00
அறிவியல் தமிழ்	ரூ. 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ. 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.